விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 26 வெள்ளிக்கிழமை (08.04.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 110

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# புலிகளுடன் இணைங்கிச் செயற்பட ஜே.வி.பி. அனுமதியளித்தாலும் மக்கள் அனுமதிக்கமாட்டார்கள்

## இராணுவம் - புலிகளுடன் நேற்று கண்காணிப்புக் குழுத் தலைவர் பேச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக தொடரும் ஆட்கொலை சம்பவங்கள் உள்ளிட்ட தற்போதைய நிலைபரங்கள் குறித்து அறிந்துகொள்வதற்காக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹகறுாவ ஹெறாக்லண்ட் மட்டக்களப்பிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

நேற்று முற்பகல் மட்டக்களப்பு 233 ஆவது படைப்பிரிவு இராணுவத் தலைமையகத்தின் கட்டளை அதிகாரி லக்சிறி அமரதுங்க உட்பட இராணுவம், பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகளைச் சந்தித்து அவர் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின் பின்னர் மாலையில் கொக்கட்டிச்சோலையில் உள்ள சோலையகத்தில் விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு, அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருவாய் மலர்கிறார் கதிர்காமர்

(கொழும்பு)

**இனப்பிரச்சினைத் தீர்வு - பொதுக் கட்டமைப்பு உருவாக்கம் போன்ற எப்பிரச்சினை என்றாலும் தமிழீழ விடுதலைப் புலிகளை அனுகவேண்டியுள்ளது. இதற்கு ஜே.வி.பி. ஆதரவு தந்தாலும் நாட்டு மக்களும், சர்வதேச சமூகமும் இடமளிக்கமாட்டாதென வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.**

**நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் கதிர்காமர் இவ்வாறு திருவாய் மலர்ந்திருக்கிறார். அவர் மேலும் தெரிவிக்கையில்,**

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சீனப் பிரதமர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அழைப்பின் பேரில் சீனப் பிரதமர் வென் ஜியாபொங் இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். இங்கு அவர் ஜனாதிபதி வாசஸ்தலத்தில் ஜனாதிபதியுடன் முக்கிய பேச்சுக்களை உத்தியோகபூர்வமாக நடத்தவுள்ளார்.

அவரின் விஜயத்தின்போது தொழில்நுட்ப விடயங்களில் உதவிகள் மற்றும் பொருளாதார, விவசாய நிவாரண வழங்கல் உட்படப் பல விடயங்களில் உடன்பாடுகள் எட்டப்படவுள்ளன. பல ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன.

நாளை சுனாமியால் பாதிக்கப்பட்ட பாணந்துறைப் பிரதேசத்திற்கு அவர் விஜயம் செய்வார். அத்துடன் சீன அரசின் உதவியுடன் செயற்படும் பாணந்துறை மீன்பிடித்துறைமுகப் புனரமைப்புப் பணிகளையும் தொடக்கிவைக்கும் நிகழ்விலும் கலந்து

## பாப்பரசரின் இறுதி ஆராதனை இன்று சோகமயத்தில் மூழ்கியது வத்திக்கான்



(வத்திக்கான்)

புனித பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் இறுதிச் சடங்குகள் இன்று ரோம் நகரில் நடைபெறவுள்ளது. பாப்பரசரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக உலகநாடுகளின் தலைவர்கள் நேற்று ரோமுக்கு புறப்பட்டுச் சென்றனர். 25 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் உலகநாடுகளிலிருந்து ரோமில் கூடியுள்ளதாக வத்திக்கான் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகத் தலைவர்களின் வருகையை ஒட்டிப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பாப்பரசரின் புனித உடல் புனித பீற்றர்ஸ் சதுக்கத்தில் அடக்கம் செய்யப்படவிருக்கிறது. பாப்பரசரின் பிறந்த இடமான போலந்திலிருந்து கப்பல்களிலும்,

### 25 லட்சம் பேர் அங்கு திரள்வு

கள் தமது மத நம்பிக்கையின் இரண்டாயிரமாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடிக் கொண்டிருந்த சமயத்தில் தாம் பதவியிலிருந்து விலகுவது குறித்து யோசித்ததாகவும், ஆனால் பின்னர் தாம் பாப்பரசராகத் தொடர்வதற்கான திடகாத்திரத்தைத் தருமாறு ஆண்டவரை வேண்டியதாகவும் அவ் ஆவணத்தில் பாப்பரசர் கூறியிருக்கிறார்.

அத்துடன் ஏனைய மதங்களை சார்ந்தவர்கள் தமக்கு வழங்கிய ஒத்துழைப்பு பாப்பரசர் நன்றி தெரிவித்திருப்பதாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-4)

### இன்று குடாநாட்டில் பூரண துக்கம்

இளைப்பாற்றியடைந்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் இறுதி ஆரா

மகத்தான ஆன்மீகத் தலைவரை உலகம் இழந்து தவிக்கிறது. சுதந்திரம், விடுதலை,

...ங்கள் எட்டப்படவுள்ளன. பல ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன.

நாளை சுனாமியால் பாதிக்கப்பட்ட பாணந்துறைப் பிரதேசத்திற்கு அவர் விஜயம் செய்வார். அத்துடன் சீன அரசின் உதவியுடன் செயற்படும் பாணந்துறை மீன்பிடித்துறைமுகப் புனரமைப்புப் பணிகளையும் தொடக்கிவைக்கும் நிகழ்விலும் கலந்து கொள்ளவுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷவையும் சந்தித்து பேச்சுக்களை நடாத்துவார். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விககிரம சிங்கவையும் சந்தித்துப் பேசுவார்.

(த-06)

...கான் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகத் தலைவர்களின் வருகையை ஒட்டிப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பாப்பரசரின் புனித உடல் புனித பீற்றர்ஸ் சதுக்கத்தில் அடக்கம் செய்யப்படவிருக்கிறது. பாப்பரசரின் பிறந்த இடமான போலந்திலிருந்து கப்பல்களிலும், விமானங்களிலும் பெருந்திரளான மக்கள் வத்திகானுக்குச் சென்றுள்ளனர்.

இதேவேளை பாப்பரசரின் அதிகாரபூர்வ இறுதி ஆன்மீகச் செய்தியை வத்திக்கான் அதிகாரிகள் நேற்று வெளியிட்டுள்ளனர்.

'இவ்வினிய நூற்றாண்டில் கிறிஸ்தவர்

# இன்று குடாநாட்டில் பூரண துக்கம்

இளைப்பாற்றியடைந்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் இறுதி ஆராதனை இன்று நடைபெறவுள்ளதால் யாழ். குடாநாட்டில் துக்கதினம் அனுஷ்டிக்குமாறு பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மானிட விடுதலைக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த ஒரு மகத்தான ஆன்மீகத் தலைவரை உலகம் இழந்து தவிக்கிறது. சுதந்திரம், விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற உயரிய மனித பண்புகளுக்காக தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தியவர் பரிசுத்த பாப்பரசர்.

தமிழீழ மக்கள் தென்னிலங்கை ஆட்சி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உலகவங்கி வழங்கிய 400 மில்லியன் 'சுனாமி' நிதிக்கு என்ன நடந்தது?

## அரசிடம் ஐ.தே.க. கேள்விக்கணை

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கென உலகவங்கியால் வழங்கப்பட்ட நிதியை பயன்படுத்திய முறையை அரசாங்கம் வெளியிடவேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் கோரியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில், உலகவங்கி மற்றும் பல நிதிநிறுவனங்கள் பெருமளவு நிதியுதவி வழங்கியிருந்தும்கூட தனியார்துறையினரிடம் உதவுமாறு அரசாங்கம் கோரியுள்ளமை சந்தேகத்திற்குரியது. அப்படியென்றால் அரசாங்கம் உலகவங்கி நிதியை என்னசெய்தது என்று நாம் கேட்கின்றோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கென உலக வங்கி நானூறு மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை ஒரு லட்சமாக உள்ளபோது உலகவங்கியிடமிருந்து கிடைத்த நிதியைக்கொண்டு குடும்பமொன்றுக்கு 4 லட்சம் ரூபாவினை அரசினால் வழங்கியிருக்கமுடியும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# எஸ்.எம்.எஸ். மூலம் வைரஸ் பரவுகிறது

கைத்தொலைபேசிகள் மூலம் அனுப்பப்படும் எஸ்.எம்.எஸ் தகவல்கள் மூலம் வைரஸ் பரப்பப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த வைரஸ் இலங்கையில் மிக வேகமாகக் பரப்பப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கைத்தொலைபேசி வைரஸ் தாக்கத்திற்கு உள்ளானால் நட்சத்திரக்குறியுடன் பி எழுத்து தோன்றுவதாகவும், அதன் பின்னர் கைத்தொலைபேசி செயலிழப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்கத்தின் மூலம் செயலிழக்கும் தொலைபேசிகளைத் திருத்தமுடியாதெனவும் கூறப்படுகிறது. எனவே கைத்தொலைபேசிப் பாவனையாளர்கள் எஸ்.எம்.எஸ் தகவல் அனுப்புவது குறித்து எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(ச)


EXPOAIR

யாழ் கொழும்பு

தினசரி விமான சேவை




எக்ஸ்போ எயார்

யாழ்ப்பாணத்தில் 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail: jaffna @ expoavi.com, reservations @ expoavi.com,

Your friend in the skies...

வானத்தில் உங்கள் நண்பன்...

## மேல் கொத்மலை நீர்மின்திட்ட

# அணைக் கட்டுக்களினால் தோட்டங்கள் குடியிருப்புக்கள் நீரில் மூழ்கும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

மேல் கொத்மலை நீர் திட்ட அணைக்கட்டுக்களினால், வளமான தோட்ட நிலங்களும், குடியிருபபுக்களும், தலவாக் கொல்லையின் பெரும் பகுதிகளும் நீரில் மூழ்கும் அபாயம் தோன்றியுள்ளது என புதிய ஜனநாயக கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

கட்சி விடுத்துள்ள அறிக்கையில்,

மலையகத்தில் தலவாக் கொல்லையிலும் கலிடோனியா விலும அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் மேல் கொத்மலை நீர்மின் திட்ட அணைக் கட்டுகளினால் வளமான தோட்ட நிலங்களும் குடியிருப்புகளும் தலவாக்கொல்லை நகரின் பெரும் பகுதிகளும் நீரில் மூழ்கடிக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

இதனால் வரும் சூழலியல் பாதிப்புகள் மோசமானவைகளாகவே அமையப் போகின்றன. இவற்றினால் மலையக மக்கள் கடுமையான பாதிப்புக்களை அடைவார்கள்.

எனவே மலையக மண்ணிற்கும் மக்களுக்கும் மட்டுமன்றி முழு நாட்டிற்கும் ஆபத்தான முன் மாதிரியாக அமையக கூடிய மேல் கொத்மலைத் திட்டத்தை முன்னெடுக்க முழுமூச்சாகச் செயல்பட்டு வரும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை புதிய ஜனநா்யகக் கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

அத்துடன், மேல்கொத்மலைத் திட்டத்தைக் கைவிடச் செய்வதற்கான மக்கள் எதிர்ப்பியக்கத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கும் புதிய-ஜனநாயகக் கட்சி தனது முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி வருகிறது.

கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள மேற்படி அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் ஆட்சிக்கு வரும் இரண்டு ஆளும் வர்க்க கட்சிகளும் மலையகத் தொழிற்சங்கங்களினதும் கட்சிகளினதும் ஆதரவுடன ஆட்சி நடாத்திக் கொண்டே மலையக மக்களுக்கு எதிராகச செயற்படுவது வழமையாகி விட்டது.

இதில மலையகக் கட்சிகள் சில சோரம்போன நிலையிலேயே இருந்து வருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போதும இபபோதைய ஐ.ம.சு.மு. ஆட்சியாலும் மேல் கொத்மலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றன.

ஜப்பானின் பாரிய கடன் மூலம் இத்திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. இக்கடனுக்கான வட்டி ஒரு புறம் வர மறுபுறம் இத்திட்டத்தால் உற்பத்தியாக்கப்படும் 150 மெகவாட் மின் சாரத்தையும் மலையகத்தில் தோறுவிக்கப் பட்வுள்ள இரண்டு ஜப்பானியக் கம்பனிகளின் தேவைக்கே பயன்படுத்தப்பட இருக்கின்ற உண்மை மறைக்கப்படுகிறது.

அதேவேளை, நூறு ஏக்கர் வரையான வளமுள்ள தோட்ட நிலங்களும் மக்களின் வாழ்விடங்களும் தலவாக்கொல்லை நகரின் ஒரு பகுதியும் இந்நீர்த் தேக்கத் திட்டத்தினால் நீரில் மூழ்கவுள்ளன.

நட்ட ஈடு, மாற்று குடியிருப்பு, அபிவிருத்தி, வேலைவாய்ப்பு என்பன எல்லாம் முன்னைய காலங்கள் போன்றே திட்டமிட்ட பேரினவாதக் குடியேற்றங்களும் பாதுகாப்புப் படைகளின் அமைவிடங்களும் இத்திட்டத்தின் ஊடாக இடம்பெறவே செய்யும்.

இவற்றுக்கும் மேலாக தேசிய வளங்களை அந்நியருக்கு விற்று நாட்டை நாசகாரப்பாதையில் இட்டுச் செல்லும் பல்வேறு முயற்சிகளில் மேல்கொத்மலைத் திட்டமும் ஒன்றேயாகும்.

இவை அனைத்திற்கும் மேலாக ஏற்கனவே மலையகத்தில் அமைக்கப்பட்ட அணைக் கட்டுக்களாலும் தற்போதைய மேல்கொத்மலை அணைக்கட்டாலும் நிலநடுக்கம் மற்றும் சூழல் மாறுபாடுகள் ஏற்படும் எனவும் அதனால் பாரிய அழிவுகள் இடம்பெறலாம. என்றும் புவியியல் விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே, நாட்டினதும் மக்களினதும் நலன்களை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டத்தை எதிர்க்கும் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்திற்கு எமது கட்சி முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குகின்றது எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# சுனாமி அனர்த்த நிவாரணத்திற்கு அரசு 7 மில்லியனை செலவிட்டுள்ளது

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் இடம் பெறற தினம் முதல் ஜனவரி முதலாம் திகதி வரையான காலப் பகுதியில் நாட்டில் ஏற்பட்டவற்றை அனேகமானோர் மறந்து விட்டதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிககப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் பொருட்டு அரசாங்கம் இதுவரை 7 மிலலியன் ரூபாவை செலவிட்டிருக்கிறது.

சுனாமி தாக்கம் இடமபெற்ற சில மணித்தியாலங்களிலேயே நிவாரண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த பாரிய அழிவு இடம்பெற்று 100 நாட்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம ஒன்றில் சுனாமி அனர்த்தம் தொடர்பான இரண்டாவது அறிக்கையும் வெளியிடப்பட்டது.

சுனாமி அனர்த்தம் காரணமாக 8 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்திருப்பதாகவும் எனினும் 9 இலடசதது 50 ஆயிரம் பேருக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

50 இலட்சத்து 2 ஆயிரம் பேர் 773 நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்ததாகவும் இதில் தற்போது 50 ஆயிரம் பேர் 175 நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பதாகவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

(7-9)

## வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள

# உள்ளூராட்சி மன்ற செயற்திறன் போட்டியில் வெற்றிபெற்ற பிரதேச சபைகளின் விபரங்கள்

(சாவகச்சேரி)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள உளளூராட்சி மன்றங்களுக்கிடையில் 2003 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட செயற்றின் போட்டிகளிற்கான பரிசளிப்பு விழா கடந்த மாதம் 31 ஆம் திகதி வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தல் வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் உள்ளூராட்சி ஆணையாளரும் தற்போதைய உள்ளூராட்சிப் பணிப்பாளருமான செல்வி து.விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்றது.

இப்பரிசளிப்பு விழாவிற்கு வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

2003 ஆம் ஆண்டிற்கான செயற்றிறன் போட்டிகளில் மாவட்ட, மாகாண மட்டங்களில் கூடிய புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டிய உள்ளூராட்சி மனறங்களிற்கான வெற்றிக் கேடயங்களையும் சான்றிதழ்களையும் ஆளுநர் வழங்கிக் கௌரவித்தார். செயற்றிறன போட்டிகள மாநகரசபை, நகரசபைகளுக்கிடையே மாகாண மட்டத்தில நடாத்தப்பட்டது.

பிரதேச சபைகளிற்கான போட்டிகள் முதலில் மாவட்ட மட்டத்திலும் பின்னர் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபைகளில் இருந்து மாகாண மட்டத்திலும் தெரிவு செய்யப்பட்டது.

3 மாநகர சபைகளும் 7 நகரசபைகளும், 61 பிரதேச சபைகளும் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட செயற்றிறன் போட்டிகளில் பங்குபற்றியிருந்தது.

மாவட்டமட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய பிரதேச சபைகளின விபரங்கள் வருமாறு,

### அம்பாறை மாவட்டம்

1 ஆம் இடம் :- தமள பிரதேசசபை
2 ஆம் இடம் :- ஆலையடி வேம்பு பிரதேசசபை
3 ஆம் இடம் :- டெகிய தலக்கண்டிய பிரதேசசபை

### மட்டக்களப்பு மாவட்டம்

1 ஆம் இடம் :- ஓட்டமாவடி பிரதேசசபை
2 ஆம் இடம் :- போரதீவுப்பற்று பிரதேசசபை
3 ஆம் இடம் :- ஏறாவூர்பற்று பிரதேசசபை

### யாழ்ப்பாண மாவட்டம்

1 ஆம் இடம் :- வலிகாமம் தெற்கு பி.சபை (சுன்னாகம்)
2 ஆம் இடம் :- வலிகாமம் மேற்கு பி.சபை (சுழிபுரம்)
3 ஆம் இடம் :- நல்லூர் பிரதேசசபை

### கிளிநொச்சி மாவட்டம்

1 ஆம் இடம் :- கரைச்சி பிரதேசசபை

### மன்னார் மாவட்டம்

1 ஆம் இடம் :- மன்னார் பிரதேசசபை
2 ஆம் இடம் :- நானாட்டான் பிரதேசசபை

### முல்லைத்தீவு மாவட்டம்

1 ஆம் இடம் :- துணுக்காய் பிரதேசசபை
2 ஆம் இடம் :- மாந்தை கிழக்கு பிரதேசசபை (பாண்டியங்குளம்)

### திருகோணமலை மாவட்டம்

1 ஆம் இடம் :- திருகோணமலை பட்டினமும், சூழலும் பிரதேசசபை
2 ஆம் இடம் :- தம்பலகாமம் பிரதேசசபை
3 ஆம் இடம் :- கந்தளாய் பிரதேசசபை

### வவுனியா மாவட்டம்

1 ஆம் இடம் :- வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை
2 ஆம் இடம் :- வவுனியா வடக்கு பிரதேசசபை (நெடுங்கேணி)

### மாகாண மட்டப் போட்டிகள்

மாநகரசபை - 1 ஆம் இடம் :- மட்டக்களப்பு மாநகரசபை

### நகரசபை

1 ஆம் இடம் :- வவுனியா நகரசபை
2 ஆம் இடம் :- சாவகச்சேரி நகரசபை
3 ஆம் இடம் :- வல்வெட்டித்துறை நகரசபை

### பிரதேசசபை

1 ஆம் இடம் :- வலிகாமம் தெற்கு பிரதேசசபை (சுன்னாகம்)
2 ஆம் இடம் :- திருகோணமலை பட்டினமும், சூழலும் பிரதேசசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை.

(க-47)

# இடமாற்ற விபரம் தெரியாது வைத்திய அதிகாரிகள் திணறல்

(கொழும்பு)

வைததியர்களின் இவ்வாண்டிற்கான இடமாற்ற விபரங்கள் இதுவரை வெளியிடப்படாதமையால் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இடமாற்றம் பெற்றுச்செல்லும் வைத்தியர்களுக்கான புதிய இடங்கள் குறித்து அறிந்து கொள்ளமுடியாது இருப்பதாகவும் வைத்திய அதிகாரிகள் தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்குச் சேர்த்துக் கொள்ளுவதற்கான விண்ணப்பங்களை அனுப்பமுடியாத நிலையும் ஏற்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமைசசின் சுற்றுநிருபத்தின் படி இடமாற்றப்படும் அரசாங்க ஊழியர்களின் இடமாற்றம் தொடர்பான விபரங்கள் எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போது வைத்தியர்களினால் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்ள முடியாத நிலை தோன்றியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினை தொடர்பாக அரச வைத்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளதாக இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் திகஸ் ஜெயத்திலக்க தெரிவித்துள்ளார். (7-9)

# ஏழு மில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்த மண்டை ஓடு கண்டுபிடிப்பு

(பிரான்ஸ்)

சுமார் 7 மில்லியன் ஆண்டுகள் பழமையான மண்டை ஓட்டினை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பிரான்ஸ் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த மண்டையோடு மனித வர்க்கத்தின் தோற்றுவாயான மனிதக்குரங்கினுடையதாக இருக்கலாம என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மத்திய ஆபிரிக்காவில் இரு ஆண்டுகளுக்கு முன்னர் பிரான்ஸ் ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வின் போது பல்வேறு சிதைவுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

தற்போது முழுமையான மண்டைஓடு கிடைக்கப்பெற்றுள்ளமையை மத்திய ஆபிரிக்கப் பகுதியில 'தௌமா இன மக்கள்' வாழ்ந்தமைக்கான உறுதியான சான்றாகக் கொள்ள முடியும் என நிருபிக்கப்படுகின்றது. (ற)

# இராசி பலன்

08.04.2005
(பங்குனி 26, வெள்ளிக்கிழமை)
அமாவாசை பின்னிரவு 2.40 மணிவரை
உத்தரட்டாதி முற்பகல் 11.30 மணிவரை
இராகுகாலம் 10.37 - 12.07 மணிவரை
சுபநேரம் 6.07 - 7.37 மணிவரை
சித்தாமிர்தம்

| | |
|---|---|
| மேடம் | சுபசெலவு,. உறவினர் சந்திப்பு, முயற்சி தாமதம், உணர்ச்சி வசப்படுதல். |
| இடபம் | தனவரவு, சீர்த்தி, குடும்பநன்மை, தொழில் முன்னேற்றம். |
| மிதுனம் | அதிகபிரயாசை, சுபநிகழ்வு, முயற்சி கைகூடும், பிறர் உதவி. |
| கடகம் | காரியதாமதம், அமைதிக்குறைவு, புதிய திட்டமிடல், பிரயாசை. |
| சிங்கம் | தொழில் கஷ்டம், வீண்பிரச்சினை, காரிய தாமதம், தெய்வசிந்தை. |
| கன்னி | பிரயாண நன்மை, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி பலிதம், தனலாபம். |
| துலாம் | பகைவர் நேசம், காரிய சித்தி, நல்ல வரவேற்பு, தொழில் சிந்தை. |
| விருச்சிகம் | முயற்சி தாமதம், சொத்துப்பிணக்கு, தெய்வசிந்தை, மனச்சஞ்சலம். |
| தனுசு | உஷ்ண வியாதி, தாய்வழி உறவு, புதிய விடயம், காரியதாமதம். |
| மகரம் | தெய்வ தரிசனம், தொழில் சிறப்பு, போசன சுகம், நல்ல முயற்சி. |
| கும்பம் | காரிய அலைச்சல், அதிகவார்த்தை, தெய்வசிந்தை, தனவிரயம். |
| மீனம் | ஜனவசியம், தனவரவு, நல்ல முயற்சி, பிரயாணம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

—வளவன்

## மின்சாரசபை, பெற்றோலியத்துறைகளை

# தனியார்மயப்படுத்துவதற்கு எதிராக நாடாளுமன்றில் விசேட திட்டம் தேவை

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை மற்றும் பொற்றோலியக் கூட்டுத்தாபனத்துறைகளை மறுசீரமைப்பதற்கு முன்னர் தனியார்மயப்படுத்தலுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் விசேட திட்டம தேவை என்று ஜே.வி.பி அரசிடம் நிபந்தனை விதித்துள்ளது.

அரச நிறுவனங்களில் மறுசீரமைப்பு செய்யும்போது எந்தக் காரணங்கள் கொண்டும் தனியார் மயப்படுத்த இடமளிக்காத வகையில் சட்டம் இயற்ற அமைச்சரவை அங்கீகாரம் வழங்கவேண்டும் என்று ஜே.வி.பியினால் கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கபபடுகினறது.

நாடு முன்நோக்கி... என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு சம்பநதமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால்தான் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் மறுசீரமைப்பு என்ற போர்வையில் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த முடியாத அளவிற்கு சட்டம் நிலைக்கவேண்டும் என்று ஜே.வி.பி கோரியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் ஜே.வி.பிக்கும மின்சகத்தி எரிபொருள் அமைசசருக்குமிடையே கடந்த 4ஆம் திகதி பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றுள்ளது.

அதன் அடிப்படையில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜே.வி.பியின் கோரிக்கைகள் தொடர்பாக சில முக்கிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. (க-9)

## கூ.மொ.விற்பனை நிலைய பங்குகளை

# மீளப் பொறுப்பேற்க கோரிக்கை

(கொழும்பு)

தனியார் துறையினிடம் கையளிக்கப்பட்ட கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் 40வீத பங்குகளை மீண்டும் தாம் பொறுபபேற்கவுள்ளதாகக் கூட்டுறவுததுறை அமைச்சர் தெரிவித்த போதிலும் அதற்குத் தேவையான நடவடிக்கைகள இதுவரை எடுக்கப்படவில்லை என்று அனைத்து நிறுவன ஊழியர் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தகவல் வெளியிட்ட சங்கத்தின் பொதுச் செயலாளா வசந்த சமரசிங்க அரசாங்கம் தமது கோரிக்கைகள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தாவிட்டால் எதிர்காலத்தில் கடும் நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போவதாகத் தெரிவித்தார்.

இவா மக்கள் விடுதலை முன்னணியில் பாராளுமன்ற உறுப்பினருமாவார். (7-9)

# பாப்பரசரின் திருப்பணி மறையாது என்றும் நீடித்து நிலைக்கும்

## இரங்கல் செய்தியில் மன்னார் ஆயர்

(மன்னார்)


நித்திய இளைபாற்றியடைந்த திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் இலங்கையிலே நிகழ்ந்து வந்த போரையும், அதன் அழிவுகளையும் நினைந்து தம் இதயத்தால் கண்ணீர் வடித்தவர். எமது நாட்டின் சமாதானத்திற்காகப் பல தடவைகள் பகிரங்கமாக புனித இராயப்பர் சதுக்கத்தில் கூடியிருந்த மக்களோடு சேர்ந்து இறைவனை வேண்டி வந்தவர். மூன்றாம் நாடொன்றின் ஈடுபாட்டுடன், போரை நிறுத்தி, அரசியற் தீர்வைக் கண்டுகொள்ள முழு மூச்சாக உழைத்தவர் என மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை விடுத்த இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் இவ் இரங்கல் செய்தியில்,

சித்திரைத் திங்கள் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இறைபதம் எய்தி இன்று திரு அடக்கத்திற்காக உரோமையில் வைக்கப்பட்டுள்ள பரிசுத்த தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னபபான் பக்கமாக முழு உலகமுமே தன் பார்வையைச் செலுத்தி நிற்கின்றது.

இவர் இந்த உலகத்தை ஓர் சமாதானக் குடும்பமாகப் பார்க்கத் தம்மை அர்ப்பணித்தவர். ஆயுதப் பெருக்கத்தையும், போரையும் மனிதன் நிரந்தரமாகக் கைவிட வேண்டுமென்பதை இலட்சியக் கனவாகக் கொண்டு செயற்பட்டவர். அரசியல் ரீதியில் ஒடுக்கப்பட்டவர்கள் அதிகாரப் பகிர்வின் வழி உரிமை வாழ்வு பெறவேண்டும், ஏழை, செல்வந்த நாடுகளிடையே ஏற்றத்தாழவுகள் பகிர்தல் வழி சமப்படுத்தப்படல் வேண்டுமென்று வலியுறுத்தியவர். ஒரு தேசிய இனத்தின் அரசியல் அபிலாஷைகள் நசுக்கப்படுவது ஆபத்தானது என்று சுட்டிக்காட்டியவர்.

திருச்சபையில் அவர் ஆற்றிய பணிகள் இவரைப் "பெரிய இரண்டாம் அருள் சின்னப்பர் பாப்பரசர்" என்னும் நாமத்தைப் பெறறுக் கொடுக்கக்கூடியதாய் அமைந்திருந்தன. விசுவாசத்தைக் கற்பிப்பதிலும், திருச்சபையைப் புனிதப்படுத்துவதிலும், அதை ஆண்டு வழி நடத்துவதிலும் அவருடைய பணி கடைசி மூச்சுவரை அதிசயிக்கத்தக்கதாய் அமைந்திருந்தது. கத்தோலிக்கர் அல்லாத மற்ற கிறிஸ்தவர்களுடன் ஒற்றுமையையும், மற்றச் சமயங்களுடன் உரையாடலையும் தொடர்ந்து வளர்த்து வந்தமை எல்லோர் பாராட்டுக்களையும் பெற்றிருந்தது. திருமணத்தின் இயல்பு, சிசுக் கொலை போன்றவை சர்ச்சைக்குட்படுத்தப்பட்டபோது உலகத்தின் மனச்சாட்சியாக நின்று உண்மைக்குக் குரல் கொடுத்து வந்தமையை வரலாறு மறக்கமுடியாது.



பெண்களின் மனித சமத்துவம், மேன்மை பெருமை பற்றி அவர் பேசும்போது, கிறிஸ்துவின் தாய் மரியாளோடு அவர்களை ஒப்பிட்டுக் கற்பித்திருப்பது பெண்ணியத்திற்குப் பெருமை சேர்ப்பதாய் அமைந்துள்ளது.

இறை மறுப்பைக் கொண்ட பொதுவுடைமைவாத நாடுகளுக்கு, அகிம்சை அரசியல் வழியிலே விடிவைத் தேடிக்கொடுப்பதில் பரிசுத்த தந்தையின் பங்களிப்பு அளப்பரியதாய் அமைந்திருந்தது.

மொத்தத்தில், தெய்வீகத்திலும், மனிதத்திலும் உலகைக கட்டியெழுப்ப, மறைந்த திருத்தந்தை ஆற்றிய திருப்பணி, மறையாது என்றும் நீடித்து நிலைக்கும். இவர் வாழ்ந்த காலத்திலே வாழ்ந்த நாம் அனைவருமே கொடுத்து வைத்தவர்கள். இவ் வையகத்திலே வாழ்வாங்கு வாழ்ந்த எம் அரிய திருத்தந்தை தெய்வத்துள் வைக்கப்படும் பேறு பெறுவாராக! எனவும் குறிப்பிட்டுள்ளார். (ற-4)

# 86 ஆவது சுதேசிய திருநாள் விழாவையொட்டிய போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை 86ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவையொட்டி நடாத்தப்படும் யாழ்ப்பாணத்தின் சிறந்த நட்சத்திரப் பாடகர் தெரிவுப்போட்டி நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்வதற்காக விண்ணப்பித்த அனைவரையும் அன்றைய தினமே கலந்து கொள்ளுமாறு அறிவிக்கபபட்டுள்ளது.

தொடர்ந்து, எதிர்வரும் 10ஆம திகதி காலை 6.30மணிக்கு அரியாலை சனசமூக நிலையமுன்றலில் ஆரம்பமாகவுள்ள உள்ளூர் வீரர்களுக்கான (ஆண/பெண்) மரதன் ஓட்டம், சையிக்கிள் ஓட்டம் என்பன அரியாலை சனசமூக நிலைய முன்றலில் முடிவடையும்.

அன்றையதினம் காலை 8.30 மணிக்கு 16 வயதின் கீழ்ப்பிரிவு வீரர்கள் கலந்துகொள்ளும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்டப்போட்டியும நடைபெறவுள்ளது. இதில் அரியாலை சரஸ்வதி ச.ச.நிலைய 'ஏ' அணியை எதிர்த்து, அரியாலை சரஸ்வதி ச.ச.நிலைய 'பி' அணி மோதவுள்ளது. காலை 10.30 மணிக்கு மாவட்ட ரீதியிலான கழகங்களான துடுப்பாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் போர் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து லெவன் ஸ்ரார் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 3.30 மணிக்கு யாழ்.மாவட்டத் திணைக்களங்களின் அணிகள் கலந்துகொளளும் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ்.மாநகர சபை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். மாவட்ட விளையாட்டுத்திணைக்கள அணி மோதவுள்ளது.

இவ் அனைத்துப் போட்டிகளும் அரியாலை சனசமூக நிலைய விளையாட்டுமைதானத்தில் இடம் பெறவுள்ளன.

அன்றையதினம் இரவு 7.30 மணிக்கு மின்னொளியில் யாழ். மாவட்ட ரீதியான கழகங்கள் கலந்துகொள்ளும் கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி அரியாலை அருணோதயா சனசமூக நிலைய ஆடுகளத்தில் இடம்பெறவுள்ளது. (ற)

## 'சுனாமி' நிவாரணம் வழங்கக்கோரி

# மட்டு. ஏறாவூர் மீனவர்கள் செயலகம் முன் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட தமக்கு உரிய முறையில் நிவாரணம் வழங்கப்படவில்லையெனக் கூறியே மீனவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏறாவூர் மூன்றாம் குறிச்சி மீனவக் கூட்டுறவுச் சங்கம் இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கான ஏற்பாட்டை மேற்கொண்டிருந்தது.

ஏறாவூர் மீனவ கூட்டுறவு சங்கக் கட்டடம் முன்பாக ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஏறாவூர் நகர பிரதேச செயலகம் முன்பாக முடிவடைந்தது.

ஏறாவூர் நகரப் பிரசேத செயலகம் முன்பாகவும் ஆர்ப்பாட்டக்காராகள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பேரணியின் முடிவில் பாதிக்கப்பட்ட மீனவர்களின் கோரிக்கைள் அடங்கிய மகஜர் ஒன்றை மீனவ சங்கப் பிரதிநிதிகள் பிரதேச செயலகத்தில் கையளித்தனர். (ற-8)

# காவலூரில் பொது மண்டபம் அமைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தல் நிக்கொட் நிறுவனத்தின் உதவியுடன் இரு பொது மண்டபங்கள் அமைக்கப்படவுள்ளன.

மேற்படிப் பொது மண்டபங்கள் இரண்டும ஏழு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இப் பொது மண்டபங்கள் புளியங்கூடல் மற்றும் கரம்பொன் கிழக்கு ஆகிய இடங்களில் அமைககப்படவுள்ளதாக மேலும் தெரியவருகின்றது. (ற-75)

# சேவை நலன் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினது பணிகளையொத்த சைவ பரிபாலனசபையின் தலைவராகவும், பரீட்சைச் செயலாளராகவும் சிறப்பாகப் பணியாற்றிய சைவப புலவர் வல்லிபுரம் கந்தசாமி அவர்களது சேவையைக் கௌரவிக்கும் நோக்கோடு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு குழுவின் தலைவர் கலாநிதி க.குணராசா தலைமையில் மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் பாராட்டு வைபவம் ஒன்று நடாத்தப்படவுள்ளது. (ற)

# இளைஞர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் கடந்த செவ்வாய்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

22வயதான இளைஞர் ஒருவரே இந்தச் சூட்டுச்சம்பவத்தில படுகாயமடைந்தவராவார். இவர் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்படடுள்ளார்.

இவர் நகரின் மத்தியில் நடந்து சென்றுகொண்டிருந்த வேளையில் இனந்தெரியாதோர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோத்தினை மேறகொண்டுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7-4)

# பாடசாலை 2ஆம் தவணை 25ஆம் திகதி ஆரம்பமாகும்

(துன்னாலை)

முதலாம் தவணை முடிவுற்று இன்று மூடப்படும் பாடசாலைகள 2ஆம் தவணைக்காக எதிர் வரும 25ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாகக் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. (து)



பாசையூர் சென் அன்ரனீஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய் வல்லுனர் போட்டி பாடசாலை அதிபர் திருமதி கலிஸ்ரா செல்வநாயகம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிபர் மங்கள விளக்கு ஏற்றுவதையும், அருகில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட 'நடுவுநிலைச் செம்மல்' கப்ரின் டி.எ.எம்.குணசிங்கம் (ஜே.பி), சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட அருட்செல்வி மேரி பாஸ்கல் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.


## விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக் ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற்கள், சிற்றிச்ன், சீகோ கைமணிக்கூடுகளையும், சுவா மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக் கொள்ள

**நியூ சிற்றி ரேடர்ஸ்**

குளத்துக்கு முன்பாக, 135, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். T.P: 222 3226

# சமாதான நடவடிக்கை, மீள்குடியேற்றம் தொடர்பில் முஸ்லிம் மக்களிடையே கருத்துக் கணிப்பு

(புத்தளம்)

சமாதான நடவடிக்கை மற்றும் வடக்கில் மீள்குடியேற்றம் சம்பந்தமாகவும், சமாதானத் தீர்வில முஸ்லிம்களின் எதிர்ப்பார்ப்பு என்பன குறித்தும் மககளின் கருத்தறியும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் அபிவித்தித் திட்டத்தினதும், இஸ்லாமிய நிவாரண அமைப்பினதும் அனுசரணையுடன் முசலிப் பிராந்திய மக்கள் ஒன்றியம் இதனை ஆரம்பித்துள்ளது.

சுமார் 6மாத காலத்துக்குள் இக கருத்துக் கணிப்புப் பணிகள நிறைவுறும் என மக்கள் ஒன்றியத்தின் தலைவர் ஏ.எம்.மிஹலார் தெரிவித்தார்.

அவ்வாறு சேர்க்கப்பட்ட மகக்கள் கருத்துக்களை, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டக் காரியாலயத்தின் ஊடாக, இலங்கை அரசு மற்றும் விடுதலைப்புலிகள் இயக்கம் என்பவற்றுக்குச் சமாப்பிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

சொந்த வடபுல மண்ணிலிருந்து இடம்பெயர்க்கப்பட்ட முஸ்லிம்கள் கடந்த 15 வருட காலமாக வாழுகின்ற பிரசேதங்களில எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக, தற்காலி, நிரந்தரப் பிரச்சினைகளை இனம் கண்டு அதனைச் சர்வதேசமயப்படுத்துவதே இத்திட்டத்தின பிரதான குறிக்கோளாகும்.

அதேவேளை, வடக்கில் முஸ்லிம்களது மீள்குடியேற்றமே தற்காலிக பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வாகும்.

எமது இருப்பும், பாதுகாப்பும் உத்தரவாதப்படுத்தப்படும வகையில் தமிழ்த் தரப்புடனும், அரசுடனும் பேச்சுக்களை நடத்துவதன் மூலமே தற்காலிக பிரச்சினைகளைக் களைய முடியும் என வடக்கு முஸ்லிம்கள் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் ஏ.எம். மிஹ்லார் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தில், புத்தளம், கல்பிட்டி, முந்தல் மற்றும் வண்ணாத்து வில்லு ஆகிய நான்கு பிரதேச செயலகங்களை மையமாகக் கொண்டு, இங்கு வசிக்கும் வடக்கு முஸ்லிம்களிடமிருந்து இத் தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ற-15)

# இலங்கை - ஹொங்ஹொங் நாணய மாற்றுக் குழுக்களிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து

இலங்கை மூலதனச் சந்தை சிறந்த திறந்த பொருளாதாரத்துக்கு இடடுச் செல்லும் வணணம இருப்பதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகளை விரிவுபடுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சர்வதேச பணமுறிவு மற்றும் நாணய மாற்று தொடர்பான 30ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் உள்நாட்டு வெளிநாட்டு பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் இலங்கை பணமுறி நாணய மாற்று குழுவுக்கும ஹொங்ஹொங் நாணய மாற்றுக் குழுவுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டது. (ற-8)

# கிணற்றிலிருந்து கைக்குண்டு மீட்பு

துன்னாலை கலிகைச் சந்தயின் அருகிலுள்ள விடிவெள்ளி தேநீர் கடை அமைந்துள்ள காணியின் கிணற்றிலிருந்து கைக்குண்டு ஒன்று கடை உரிமையாளரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கலிகைச் சந்தியிலுள்ள விடிவெள்ளி தேநீர்க்கடை அமைந்த காணியிலுள்ள கிணற்றைச் சுத்தப்படுத்துவதற்காக நீரை இறைத்த வேளை குறித்த கிணற்றினுள் மர்மமான பொருள் ஒன்று இருப்பதை அவதானித்த கடை உரிமையாளர் அதனை அருகிலுள்ள இராணுவ முகாமுக்கு தெரியப்படுத்தியதையடுத்து நெல்லயடி பொலிஸார் வரவழைக்கப்பட்டு கிணற்றிலிருந்த குண்டைபார்வையிட்டு உடன் இராணுவ குண்டு செயலிழக்கவைக்கும் பிரிவினரை வரவழைத்து குறித்த கிணற்றிலிருந்த குண்டினை மீட்டு அருகிலுள்ள வயல்வெளியில் வெடிக்கவைத்தனர்.

இக் கிணறு அமைந்துள்ள காணிக்கு அருகிலேயே இராணுவ முகாம் ஒன்றும் உள்ளது குறிப்பிடத்தக்கது. (து-101)

# ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ் மாவட்ட அலுவலகம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நாவலர் மணிமண்டபத்தில் நடாத்திவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று பி.ப.6.00 மணிக்குச் சிறப்புச் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில்,

'மெஞ்ஞானம் காட்டும் விஞ்ஞானம்' எனும் விடயம் பற்றி சைவப் புலவர் ப.சாந்தகுமர் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

மேலும், இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின யாழ்.மாவட்ட அலுவலகததினால் யோகாசன தியான வகுப்புக்கள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக நடாத்தபபட்டுவருகின்றது. அத்துடன், வயலின், மிருதங்கம் வகுப்புக்களும் நடாத்தப்படுகின்றன.

இந்நிலையில் பண்ணிசை வகுப்புக்கள் மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ற19)

# கலிகைக் கந்தனுக்கு மகா கும்பாபிஷேகம்

துன்னாலை கலிகைக்கந்தனுக்கு, எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை காலை 8.05முதல் 9.50 மணிவரை கும்பாபிஷேக கிரிகைகள் நடைபெறவுள்ளது.

10ஆம் திகதியன்று கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8மணிமுதல் மாலை 5மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும்.

கும்பாபிஷேக கிரியைகள் நல்லை ஆதீன சிவாச்சாரியாரும் சாவகச்சேரி வாரியப்பர் சிவன் கோவில் குருவுமான கலாநிதி சிவ ஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 தினங்கள் உற்சவ விழா நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (து-101)

# 'கார்ப்' மற்றும் 'சிறுப்' திட்டங்களின் கீழ் யாழ்.மாவட்டத்திலுள்ள 6 பிரதான வீதிகள் 30 மீற்றருக்கு அகலமாக்கி புனரமைக்கப்படும்

## கண்டிவீதியை நான்கு வழிப் பாதையாக மாற்றியமைப்பதெனவும் செயலகக் கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

'கார்ப்' மற்றும் 'சிறுப்' திட்டங்களின் கீழ் யாழ்.மாவட்டத்திலுள்ள 6 பிரதான வீதிகள் 30 மீற்றருக்கு அகலமாக்கிப் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதுடன், நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையில் ஏ-9 கண்டிவீதி நான்கு வழிப் பாதையாகவும் மாற்றியமைக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள வீதிகளைப் புனரமைப்பது தொடர்பில் யாழ்மாவட்டச் செயலகத்தில் நேற்றையதினம் காலை அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் இடம்பெற்ற விசேட கூட்டத்திலேயே மேற்படி தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ் விசேட கூட்டத்தில் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா, யாழ்.மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் பிரதீபன், யாழ்.மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் ஸ்ரீனிவாசன், யாழ்.மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் பூ.சிவனேசன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப் பணிப்பாளர் தர்மகுலசிங்கம் மற்றும் பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 'கார்ப்' திட்டத்தின் கீழ் கண்டிவீதியும் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் சிறுப திட்டத்தின் கீழ் யாழ்.பருத்தித்துறை வீதி, யாழ்பலாலி வீதி, யாழ் காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணத்தில் இருந்து மானிப்பாய வீதியூடான காரைநகர் வீதி மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து பண்ணை வீதியூடாக ஊர்காவற்றுறை வீதி என்பனவும் அகலமாக்கிப் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இவ்வாறான வீதிகளை அகலமாக்கிப் புனரமைப்புச் செய்யும் திட்டம் குறுகியகால மற்றும் நீண்ட காலத்திட்டங்கள் என இரண்டாகப் பிரித்தும் மேற்கொள்ளப்படவுள்ளன.

குறுகிய காலத்திட்டதிற்கே தற்போது நிதி ஒதுக்கப்பட்டுள்ளதனால் முதலில் குறுகியகாலத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

நீண்டகாலத்திட்டத்தின் கீழ் கண்டிவீதி நான்கு வழிப்பாதைகளாக அமைக்கப்படவுள்ளது. அதாவது, 66 அடி (30 மீற்றர்) அகலமான வீதியாக கண்டிவீதியை அமைப்பதற்குத் தீமானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, ஏனைய ஐந்து வீதிகளையும் நீண்டகாலத்திட்டத்தின்கீழ் 30 மீற்றர் அகலமான வீதியாக அமைப்பதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், குறுகியகாலத் திட்டத்திற்கே நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் முதலில் குறுகியகாலத் திட்டத்தின் கீழ் கண்டி வீதியை 20 மீற்றர் அகலமான இரு வழிப் பாதைகளாகவும் ஏனைய ஐந்து வீதிகளையும் 20 மீற்றர் அகலமான வீதியாகவும் அமைக்கப்படவுள்ளன.

முதலில் குறுகிய காலத்திட்டத்திற்கமைய வீதிகள் அகலமாக்கப்படவிருந்தாலும் நீண்ட காலத்திட்டதிற்கமையவே இடங்கள் சுவீகரிக்கப்படும்.

நீண்டகாலத் திட்டத்திற்கு அமைவாக வீதிகளை அகலமாக்குவதற்குத் தேவையான இடங்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது நில அளவீட்டுத் திணைக்களம் ஊடாக அளந்து அவ்விடங்களுக்கு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் விலை மதிப்பிடப்பட்டு பின் அவ் இடங்களின் உரிமையாளர்களுக்கு விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட தொகை வழங்கப்படும் இதன் பிற்பாடு அவ் இடம் சுவீகரிக்கப்படும் என கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இவ் வீதிகளை அகலமாக்கும் போது அவ்விடங்களில் இருந்து அகப்படும் கட்டடங்கள் சட்டரீதியாகப் பதிவுசெய்யப்பட்டு கட்டப்பட்டிருப்பின் மாத்திரம், நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

அத்துடன் நீண்டகாலத்திட்டம் முடிவடையும் வரை மேற்படி குறிப்பிட்ட பகுதிகளுக்குள் புதிதாகக் கட்டடங்கள் எதுவும் கட்டுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

மேலும, இவ் வீதிகளை அகலமாக்கும் போது அவ்விடங்களுக்குள் புகையிரதப் பாதைகளும் அடங்குவதால் அப் புகையிரதப் பாதைகளை மாற்றி அமைப்பதற்கு ஏற்ற வகையில் ஆரம்பத்திலேயே இடங்களைத் தீமானிப்பது தொடர்பாகவும் புகையிரத திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படவுள்ளது.

மேற்குறிப்பிட்ட வீதிகளை அகலமாக்கும் குறுகிய காலத்திட்டம் 2006ஆம் ஆண்டு இறுதிப்பகுதிக்குள் பூர்த்தியாக்கப்படல் வேண்டும்.

மேலும், இராசவீதியை கடுகதிப்பாதையாக மாற்றியமைப்பது தொடர்பாகவும் செயலகக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் குறுகிய காலத்திட்டத்திற்கமைவான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் மக்கள் ஒத்துழைக்கும் பட்சத்திலேயேதான் இவ் வேலைத்திட்டங்களை கால எல்லைக்குள் பூர்த்தியாக்க முடியும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார். (ற-19)

# புனித அந்தோனியார் ஆலய விழா

(பொன்னாலை)

புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலய உயர் திருவிழா இனறு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இன்றைய தினம் பிற்பகல் 4மணிக்கு கொடியேற்றமும் தொடர்ந்து குழந்தைகளுக்கான வேண்டுதல், ஆசீர்வதித்தல், கூட்டு வழிபாடு என்பனவும் இடம்பெற்று பிற்பகல் 5.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

எதிர்வரும் 10ஆம் திகதி காலை கூட்டு வாழிபாடு, சமாதானத்திற்கான வேண்டுதல், சமாதானச் செய்தி என்பவற்றைத் தொடர்ந்து காலை 8.30 மணிக்குத் திருவிழாத்திருப்பலியும் 9.30 மணிக்கு அந்தோனியாரின் தேர்ப்பவனியும் அருளாசியும் இடம்பெறவிருக்கின்றன. (து-49)

# ஊழியர் தட்டுப்பாட்டை நீக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

சுகாதாரத்துறையில் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களுக்கு இருக்கும் தட்டுப்பாட்டை நீக்குவதறகு சுகாதார அமைச்சு உடனடி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய உப மருத்துவ சேவை மற்றும் தாதிமார் சேவைக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கையில் அமைச்சு ஈடுபட்டுள்ளது.

இத்திட்டதிற்கமைய ஆயிரம் பேர் உப மருத்துவர் சேவைக்கும், இரண்டாயிரம் பேர் குடும்ப மருததுவர் சேவைக்கும் சேர்த்துக கொள்ளப்படவுள்ளனர்.

சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பதுளையில தாதிமார் பயிற்சிக் கல்லூரியில் அண்மையில் 250 தாதிய மாணவர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கிவைத்து உரையாற்றும்போதே இவற்றைத் தெரிவித்தார்.

அடுத்த 3 ஆண்டுகளுககுள சுகாதார சேவைக்காக 15 ஆயிரம் பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# கலை நிகழ்ச்சிகள்

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்திவரும் வாராந்த நிவழ்வில் இன்று மு.ப. 10.30 மணிக்கு இணுவில் இந்துக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. (து)

# அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம்

(பொன்னாலை)


கொக்குவில் இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொர்துக்கூட்டம் நாளை சனிக்கிழமை பி.ப.3:30 மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் பொ.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பெற்றோா, ஆசிரியர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (து-49)

# "வல்ல குருநாதர் நம்மை வருத்துவது..."

## வெள்ளி நற்சிந்தனை

மனிதன் வாழ்க்கையை வையத்துள் வாழ்வாங்கு வாழ வள்ளுவர் எவ்வளவோ அற்புத மான வழிவகைகளைக் கூறியிருக கின்றார். வள்ளுவர் காட்டிய பாதையில பயணம் செய்தாலும்



எத்தனையோ தடை உண்டாகின றது. அவற்றிலெல்லாம் எதிர் நீச்சல் போட்டு தாண்டி, ஏணிப் படிகளில் ஏறிக்கால் பதித்து உச்சத்தில் நிற்பவன்தான் சிறந்த மனிதன். அவ்வாறான தடைக் கற்கல் ஏற்படுவதற்குக் காரணம் வாழ்க்கையை மனிதனுக்கு உணர்த்தவே என்று பகவத் தர்மம கூறுகின்றது.

சோதனை என்பது மனிதன் தன்னை உணருவதற்கான ஒரு உந்து சக்தி. சோதனைகள் ஏற் பட்டதும் "இறைவனுக்குக் கண ணில்லை. இறைவன் ஏன் மனி தனைப் படைத்தான்? எனக்கு மட்டும் தான் தொடர்ந்து சோத னைகள் வருகிறதே? ஐயோ!" என கூறி பலர் அலுத்துக் கொள் கின்றனர். எம்மிடம் மனிதனைப் படைக்கும் சக்தி இருந்தால் நன்கு சிநதித்துத் தான் அவனைப் படைப்போம். மனிதன் கஷ்டப் பட வேண்டும் என படைப் போமா? சாதாரண மனிதர்களா கிய எங்களுக்கே இவ்வளவு புத்திசாலித்தனம் இருந்தால் ஆண்டவனுக்கு எவ்வளவு இருக்கும் என்பதைச் சிந்தித் துப் பார்க்கவேண்டும்.

நாம் தெரிந்தும் தெரியாம லும் எவ்வளவு பாவங்களைச் செய்கின்றோம். இதற்கெல்லாம் எமது ஆன்மா இறைவனிடம் போய் "நான் அநேக பாவங்க ளைச் செய்துவிட்டேன் அத னால் எனக்குப் பிராயச்சித்தம் தேடுவதற்காக இன்னொரு பிறவி கொடு" என வரம் கேட்கிறோம். அந்த வரத்தின் தன்மையே நாம் அனுபவிக்கக் கூடிய சுகங் களும் துக்கங்களுமே தவிர கடவுள் எம்மைச் சோதிப்பது கிடையாது.

இதற்கு பகவான் சொல்லு கின்றார். "வரக் கூடிய ஒவ்வொரு பிரச்சினையையும் உங்களுக்கு உள்ளேயிருக்கும் திறமைகளை யும் நீங்கள் தெரிந்து கொள் வதற்குத்தான் சோதனைகள் வருகிறதே தவிர அவை உங்க ளுக்கு வந்த சோதனைகள் கிடை யாது" அதாவது மாணவனுக்கு பரீட்சை வைத்துத் திறமைகளை வெளிக் கொண்டு வந்து அவ னுக்கே தெரியவைப்பது போன் றது தான், இறைவன் நடத்தும் சோதனையும ஆகும். உங் களது திறனை வெளிக் கொணடு வர வைக்கும் பரீட்சை தான் உங் களுக்கு வரும் பிரச்சினைகள். அந்தப் பிரச்சினையின் ஆழத் திற்கும் போகப்போக உங்க ளுக்குளே இருக்கும் திறமை களை நீங்கள் கண்டு பிடிக்க முடியும். அதன் முடிவில் நீங்கள ஆஹா! நான் இவ்வளவு திற மைசாலியா! என்று ஆச்சரியப் படுவீர்கள்.

உங்களுக்கு ஒரு கஷ்டம் வரு கிறது என்றால் அதைத் தாங் கும சக்தியையோ அல்லது அப் பிரச்சினையில் இருந்து வெளி வரக்கூடிய சக்தியையோ பக வான் நிச்சயமாகக் கொடுத்தி ருப்பார். மனிதர்களாகிய நாம் ஓர் இடத்திற்கு செல்ல புறப்பட்டு விட்டோம். பொதிகள் பல அளவு களில கட்டப்பட்டுள்ளது. அதில் ஒரு சிறிய பிள்ளையும் இருக் கின்றான்.

அவரிடமும் ஒரு பொதி கொடுக் கப்பட வேண்டும் என வைத்துக் கொள்வோம். நாம் அந்தப் பையனிடம் கூடிய அளவு நிறை யுடைய பொதியை சுமதது வோமா? அவனால் எடுத்து வரக் கூடிய பொதியின் அளவுதான் கொடுப் போம். மனிதர்களாகிய நாமே அளவிட்டு மதித்துக் கொடுக்கி றோம் என்றால் அந்தப்பரம் பொருளுக்குத் தெரியாதா எந்த ளவு சுமையைத் தூக்க வல்ல வர் என்று. எனவே எங்களுக்கு வரும் பிரச்சினைகளை எம் மால் தாங்கமுடியும் என்று பகவானுக்குத் தெரியும். நாம் ஒன்றை உணரவேண்டும். எமக்கு வரும் சோதனையும் வேதனை யும் நாம்போன ஜென்மத்தில் செய்தபாவங்களின் அளவிலேயே உள்ளது.

யோசித்துப்பாருங்கள் உங் களுக்கு வந்த சோதனையால் தான் நீங்கள் 'எது பொய் எது நிஜயம் என்பதைப் புரிந்து கொள் கிறீர்கள், யார் நல்லவர் யார் கெட் டவர் என்பதை உணருகிறீர்கள்' உங்களை உங்களுக்கு உணர வைப்பதற்கு மிகப்பெரிய வழி பிரச்சினைதான் இவை மட்டுமன்றி உங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வரும் குருவும் பிரச்சினை தான் என்று பகவத் தர்மம் கூறு கின்றது. எனவே கடவுள் யாருககும் சோதனை கொடுப்பதில்லை.

அவரவரை உணர்ந்து கொள் ளவே பிரச்சினைகள ஏற்படுகின் றன. பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்றது என்றால் பகவா னைப் பிரார்த்தனை செய்யுங் கள் நீங்கள் பேசும் விதம், பழகும் விதம் ஆகியனவற்றில் மாற்றங் கள் ஏற்படுத்தி சோதனைகளை விலக்கி விடலாம் என பகவத் தர்மம் கூறுகிறது. □

**கலா சுந்தரேசன்**
ஆசிரியர்
யா. கொக்குவில் இந்துக் கல்லூரி

## வாகன விபத்தில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முத்திரைச் சந்தியில் கிட்டுப்பூங்காவை அண்மித்த பகுதியில் அண்மையில் நடைபெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று பஸ்சுடன் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த திருநெல்வேலியைச் சேர்ந்த ப. பாலமோகன் (வயது 34) என்பவரே காயமடைந்த நிலையில யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (கு-19)

## பரிசாரர் பதவிக்கான பயிற்சி வகுப்பு

(பருத்தித்துறை)

யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங் கும் வைத்தியசாலையில் பணி யாற்றிய சாதாரண தொழிலாளர் களில் இருந்து தெரிவு செய் யப்பட்ட 30 பேருக்கு பரிசாரர் பதவிக்கான பயிற்சி வகுப்பு மந் திகை அரசினர் வைத்தியசாலை யில் கடந்த வெள்ளிக்கிழமை மலேரியா தடுப்பு வைத்திய அதி காரி கே.எஸ்.சிவபாதத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மநதிகை அரசினர் பதில் வைத் திய அதிகாரி ஆர்.குழந்தை வடிவேல தலைமையில் நடைபெற்ற இவ வைபவத்தில் நிர்வாக உத்தி யோகத்தர் ஏ.சின்னத்தம்பி மற் றும் பொறுப்புத் தாதி உத்தியோ கத்தர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர். (க-35)

## பழமைவாய்ந்த தேர்

(பொன்னாலை)

சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலயத்தில் பழமை வாய்ந்த தேரில் உள்ள சிற்ப ஓவியங் களைத் தொல்பொருளியலா ளர்கள் பலர் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

புராண கால வரலாற்றைச் சித்தாக்கும் வகையில் அமைந் துள்ள இத்தேரை ஆலய பரி பாலன சபையினர் ஆலய முன் றலில் பாதுகாப்பான மண்டபத் தில் வைத்துப் பாதுகாத்து வரு கின்றனர்.

இச் சிற்பத்தேரைப் பார்ப்பதற் காக நாளுக்கு நாள் பெருமளவா னோர் கூடுவது ஆலயத்தின் தொன் மையை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கின்றது. (7-49)

## மகாகும்பாபிஷேகம்

(பொன்னாலை)

மீசாலை கான்றைச்சாட்டி அலக்கிர பூதவராய விநாயகர் ஆலயத்தின் புனருத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபி ஷேகம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (ற-49)


சுபமான தருணத்தில்...

நாளை முதல்

யாழ்ப்பாணத்தில்

மக்கள் மனங்களை வென்ற
பீபல்ஸ் லீஸிங் கம்பனி
பரந்த விஸ்த்தரிக்கப்பட்ட கிளையாக
மீண்டும் உதயமாகிறது



பீபல்ஸ் லீஸிங் கம்பனி லிமிட்டெட்
மக்கள் வங்கிக்கு முழு உரித்துடைய நிறுவனம்
இல. 82 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்


தலைமையகம்: 67, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 2, தொ.பேசி 2481000
கிளைகள்: கண்டி, இரத்தினபுரி, குருணாகலை, மாத்தறை, பதுளை, அநுராதபுரம், பொலன்னறுவை, காலி, நீர்கொழும்பு, அம்பலந்தோட்டை, களுத்துறை, திருகோணமலை.

# மீள்பார்வை

## பிரியானி விஜேசேகர எழுதிய

## இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 31



### அத்தியாயம் X

முழுப்பாராளுமன்றக் குழுவொன்றுக்குச் சபாநாயகர் அல்லது தலைமை தாங்கும் அலுவலர்தான் தவிசாளராக விளங்குவதுடன் அதற்கான கூட்ட நடப்பெண்ணும் இருபது உறுப்பினர்களாகும். முழுப்பாராளுமன்றக் குழுவின் நடைமுறை விதிகளும் பாராளுமன்றத்தின் நடைமுறை விதிகளும் ஒன்றே. எனவே சபை குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் ஒத்திவைக்கப்படக் கூடியதாக நிலையியற் கட்டளை 7ல்அல்லது 8ல் குறித்துரைக்கப்பட்ட நேர எல்லைகள் பின்பற்றப்பட வேண்டுமென்பது தெளிவு. முழுப்பாராளுமன்றக் குழுவுக்கும் பாராளுமன்றத்துக்கும் நடைமுறையிலுள்ள ஒரேயொரு வேறுபாடு. முழுப்பாராளுமன்றக் குழுவில் ஒரு பிரேரணைக்கு முன்னறிவித்தல் தேவையில்லை. பிரேரணை வழிமொழியப்படத் தேவையில்லை. ஓர் உறுப்பினர் ஒரே பிரேரணை மீது ஒரு தடவைக்கு மேல் பேசலாம் என்பதுதான்.

*ஆலோசனைக் குழுக்கள்*

முழுத்திருத்தமான ஒரு கருத்துரையாக இல்லாவிட்டாலும். ஆலோசனைக் குழுக்கள். சுதந்திரத்துக்கு முன்னர் டொனமூர் அரசியலமைப்பின் கீழ் செயற்பட்ட நிறைவேற்றுக் குழுக்கள் முறையின் மரபில் பின் தொடர்பவையெனக் கூறலாம்.

அமைச்சரவை அமைச்சர்களின் ஒவ்வொரு தனிவேறு அமைச்சுக்குமாகத் தாபிக்கப்படும் ஆலோசனைக் குழுக்கள் அந்தந்த அமைச்சின் செயற்பாட்டை மீளாய்வு செய்யும் கடமையைக் கொண்டுள்ளன. சபையிலுள்ள கட்சிகளின் ஆக்க அமைவை ஆலோசனைக் குழுக்கள் பிரதிபலிக்கவேண்டுமென நிலையியற் கட்டளைகள் குறித்துரைக்கின்றன. ஆலோசனைக் குழுக் கூட்டங்களுக்கு அந்தந்த அமைச்சர்களே தலைமை தாங்க வேண்டும். அமைச்சர் இல்லாதவிடத்துக் குறிப்பிட்ட அமைச்சின் பிரதியமைச்சர் தலைமை தாங்க வேண்டும். ஜனாதிபதியின் தலைமையிலுள்ள அமைச்சுக்களின் விடயத்தில் பிரதியமைச்சர் தான் கூட்டத்துக்குத் தலைமை தாங்க வேண்டும். அத்தகைய கூட்டங்களுக்கு அமைச்சர் (அல்லது பிரதியமைச்சர்) தலைமை வகிக்க வேண்டுமென்ற தேவைப்படுத்தல். அத்தகைய அமைச்சுத் தொடர்பில் அவருக்குள்ள பொறுப்பின் காரணமாகவும் அவரின் கீழுள்ள நிறுவனங்களின் செயற்பாடு பற்றி அவர் பெற்றுள்ள பரிச்சயத்தின் நிமித்தமும் ஏற்பட்டது. எனவே ஆலோசனைக் குழுக் கூட்டமொன்றுக்கு வேறு எவரேனும் உறுப்பினர் தலைமை தாங்குவதானது முற்றிலும் அர்த்தமற்றதும் ஒழுங்கற்றதுமாகும்.

1978இன் அரசியலமைப்பு. பாராளுமன்றத்துக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களும் அமைச்சரவை அந்தஸ்தற்றவர்களுமான அமைச்சர்களுக்கும் ஏற்பாடு செய்தது. இருப்பினும் தெரிவுக்குழு அமைச்சரவையிலுள்ள அமைச்சுக்களின் எண்ணிக்கைக்கிணங்கவே ஆலோசனைக் குழுக்களை நியமிக்க வேண்டுமென நிலையியற் கட்டளை 104 தேவைப்படுகின்றது. இந் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளை நடைமுறையில் பிரயோகிக்கின்ற போது. அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் பாராளுமன்றத்துக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டுமென்ற தேவைப்படுகின்ற அரசியலமைப்பின் 45 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொள்ள வேண்டும். எனவே அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களின் தலைமையிலான அமைச்சுக்களுக்கு ஆலோசனைக்குழுக்கள் அமைக்கப்படவேண்டுமா என்பதைத் தீர்மானிக்கையில் தெரிவுக்குழு ஓரளவுக்கு இசைந்து கொடுக்க வேண்டியிருக்கும்.

ஓர் ஆலோசனைக் குழுவின் கடமை சம்பந்தப்பட்ட அமைச்சின் பணியை மேற்பார்வை செய்தல் ஆலோசனைக் குழுவொன்று அமைச்சர் குறிக்கின்ற நேரத்திலும் இடத்திலும் மாதமொரு முறையாதல் கூட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வோர் ஆலோசனைக் குழுவும் சாத்தியமானவரை சபையிலுள்ள கட்சிகளின் ஆக்க அமைவைப் பிரதிபலிக்க வேண்டும். ஆலோசனைக் குழுவொன்று ஐந்து உறுப்பினர்களுக்குக் குறையாமலும் பன்னிரண்டு உறுப்பினர்களுக்கு மேற்படாமலும் தெரிவுக்குழுவால் நியமிக்கப்படும் அத்தகைய உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். தெரிவுக்குழுவால் ஆலோசனைக்குழுக்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்பவும் அவசியமாயின் அவற்றிலுள்ள உறுப்பினர்களை விலக்கவும் முடியும். ஆலோசனைக்குழுவொன்றின் மூன்று அடுத்தடுத்த கூட்டங்களுக்குக் காரணங் கூறாது சமுகமளிக்கத் தவறுகின்ற ஓர் உறுப்பினர் அக்குழுவில் தமது உறுப்புரிமையை இழந்தவராகக் கருதப்படுவார். ஆலோசனைக் குழுவின் மாதாந்தக் கூட்டங்களில் ஒவ்வோர் அமைச்சினதும் செயலாளர். திணைக்களங்களின் தலைவர்கள். சம்பந்தப்பட்ட அமைச்சின் கீழ் நிறப்படுத்தப்பட்டுள்ள கூட்டுத்தாபனங்களினதும் ஏனைய நிறுவனங்களினதும் தலைவர்கள் ஆகியோர் சமுகமாயிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். ஆலோசனைக்குழுக்களின் கடமைகள் 109ஆம் நிலையியற் கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. உத்தேச சட்டங்களையும் மதிப்பீடுகளையும் பிரேரணைகளையும் ஆண்டறிக்கைகளையும் பாராளுமன்றத்தால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏனைய விடயங்களையும் நுண்ணாய்வு செய்தல் அவற்றில் அடங்கும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் திணைக்கள அதிகாரிகளை விசாரணை செய்வதன் மூலம் அரசாங்கத் திணைக்களங்களின் பணியாற்றலையும் செயற்பாட்டையும் ஆராய்ந்தறிவதற்கு வசதியான ஓர் அரங்காக ஆலோசனைக் குழுக்கள் விளங்குகின்றன. இவ்வகையில் பாராளுமன்ற வினாக்களாகவோ பிரேரணைகளாகவோ எழுப்பவேண்டிய அநேக விடயங்களைத் திருப்தியான முறையில் எழுப்புவதற்கும் பதில்களைப் பெறுவதற்கும் கூடுமாயுள்ளது. ஒரு சந்தர்ப்பத்தில் பொது மனுக்குழு பாடசாலைகளின் நிர்வாகத்தில் அடிக்கடி ஏற்படுகின்ற ஒரு பிரச்சினையைக் கல்வி பற்றிய ஆலோசனைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தியது. ஆலோசனைக் குழு குறித்த சில பணிப்புரைகளைக் கொண்ட நிருவாகச் சுற்றறிக்கையொன்றை விடுக்கும்படி அமைச்சைக் கோரியதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடுமாயிருந்தது.

ஆலோசனைக் குழுவொன்றின் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் மூன்றாகும். ஓர் ஆலோசனைக் குழு அதன் கடமைகளை நிறைவேற்றும் பொருட்டுச் சாட்சிகளை அழைக்கவும். பத்திரங்கள். பதிவுச் சான்றுகள் ஆகியவற்றைக் கோரிப் பெறவும் கூடும்.

நிலையியற் கட்டளைகளில் உப குழுக்களை (தேவையான போது ஒரு தவிசாளரையும் வேறு இரு உறுப்பினர்களையும் கொண்டதாகவும் தாய்க் குழுவின் அதே அதிகாரத்தையுடையதாகவும்) நியமிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பாராளுமன்ற உறுப்பினர் எவரும் (அவர் ஓர் உறுப்பினராயிராத) ஆலோசனைக் குழுவொன்றின் கூட்டத்தில். தவிசாளரின் கோரிக்கையின் பேரில் அல்லது அவரின் அனுமதியுடன். கலந்து கொள்ளலாம். பாராளுமன்றச் செயலாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து ஆலோசனைக் குழுவின் கூட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அமைச்சின் செயலாளரின் கடமையாகும்.

இறுதியாக ஆலோசனைக் குழுவின் அறிக்கை அதன் தவிசாளரால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் போது அது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படலாம். பல்வேறு கூட்டுத்தாபனங்களினதும் பிற அரசாங்க நிறுவனங்களினதும் ஆண்டறிக்கைகள் சட்ட ஆணைக்குழுவின் அறிக்கைகள் ஆகியவைதான் ஆலோசனைக் குழுக்களுக்கும் அடிக்கடி ஆற்றுப்படுத்தப்படும் விடயங்களாகும்.

தக்கவிதத்தில் பயன்படுத்தப்பட்டால் ஆலோசனைக் குழுவானது அரசாங்கத்தின் நிறைவேற்றுக் கிளையின் செயற்பாட்டைப் பாராளுமன்றம் பயனுறுதியுடன் நுண்ணாய்வு செய்வதற்கான மிகச் சிறந்த முறையாயிருக்கும்.

*தெரி குழுக்கள்*

தெரி குழுக்கள் அவற்றுக்கு ஆற்றுப்படுத்தப்படும் குறிப்பிட்ட விடயங்களை ஆராய்ந்து அவைபற்றி அறிக்கையிடுவதற்காக நியமிக்கப்படும் தனிப்பட அமைந்த விசாரணை ஆணைக்குழுக்களாகும். கடந்த ஐம்பத்திரண்டு ஆண்டுகளில் நீதிபதியொருவரை பதவியிலிருந்து நீக்குவதற்கான ஆலோசனையிலிருந்து வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றைத் தேடுகின்ற ஆலோசனை வரையிலான பல்வேறு நோக்கங்களுக்காகத் தெரி குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

(தொடரும்)

# புனரமைக்கப்படாத நிலையில் தென்மராட்சியில் பல வீதிகள்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பல கிராமங்களில் உள்ள வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்து வருவதால் அவ்வவ் கிராம மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இத்தகைய வீதிகளையும் ஒழுங்கைகளையும் பொதுமக்களின் பாவனைக்கு ஏற்ற வகையில் புனரமைப்புச் செய்து தரும்படி அவ் வவ் கிராமங்களில் உள்ள பொது அமைப்புக்கள் அரச அதிகாரிகளிடமும் பொது மக்களின் பிரதிநிதிகளிடமும் தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைத்திருந்தும் கூட எத்தகைய பணிகளும் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் இத்தகைய பின்தங்கிய கிராமங்களில் அவசியம் செய்யப்பட வேண்டிய செயல் திட்டங்கள் பற்றிய தேவை,மதிப்பீடுகள் அடிக்கடி செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ற-16)

# ஓய்வூதிய அதிகரிப்பு கிடைக்கவில்லையாம்

## பாதிப்புற்றோர் முறைப்பாடு

(கொழும்பு)

கடந்த வரவு செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஓய்வூதிய அதிகரிப்பை தாம் பெறவில்லை என சில ஓய்வூதியக்காரர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஏப்ரல் மாத ஓய்வூதியத்துடன் இந்த அதிகரிப்பு சேர்த்துக்கொள்ளப்படாததால் தாம் விரக்தி அடைந்துள்ளதாக அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர்.டி. திஸநாயக்க தகவல் தெரிவிக்கையில், 90 சதவீதமான ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதிய அதிகரிப்பு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும் ஆயினும் இந் நடைமுறைகளை மேற்கொள்வதில் சில இடங்களில் சற்று தாமதங்கள ஏற்பட்டதாகவும் அறிவிக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

ஓய்வூதியப் பணிப்பாளர் ஜே.ஏ.திலகரட்ண இப்பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

(7)

# கல்விக்கழகப் பொறுப்பாளருடன் வெளியீட்டு பணிப்பாளர் சந்திப்பு

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பனுக்கும்,அரச கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் எகனகேக்கும் இடையில் சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம் பெற்றது.

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வர இந்துக்கல்லூரி அதிபர் அலுவலகத்தில் இச்சந்திப்பு தனிப்பட்ட ரீதியில் இடம்பெற்றது.


அரசாங்கம் விநியோகிக்கும் பாடப்புத்தகங்களில் தமிழர் கலாசாரம் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றமை, தமிழர் தாயகப் பிரதேசங்களின் வளங்களுக்கு பாட நூல்களில் முக்கியத்துவம் வழங்கப்படாமை, பாட நூல்களில் இடம்பெறும் வர்ணங்கள் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் தடையாகவுள்ளமை மற்றும் சிங்களப் பாடநூல்களைப் போன்று தமிழ்மொழிப் பாட நூல்கள் விநியோகப்படாமை போன்ற குறைபாடுகளை கவியன்பன் சுட்டிக் காட்டினார்.

இதனை ஏற்றுக்கொண்ட கல்வி வெளியீட்டுத திணைக்களப் பணிப்பாளர், எதிர்காலத்தில் மேற்படி பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வுகளைக் காண்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். (த-4)

சகல பொதுப் பரீட்சைகளுக்குமுரிய

IQ, gk புதிய நூல்கள்

கலாநிதி க. குணராசா, பிரியா பாலேந்திரன், செந்தில்வடிவேல் ஆகியோர் ஆக்கியவை




(1) உங்கள் பொது உளச்சார்பு-IQ,
(2) உங்கள் பொது அறிவு-gk
(3) பொது நுண்மதி (நுண்ணறிவியல்)-IQ &gk
(4) பொது உளச்சார்பு-IQ
(5) பொது அறிவு-gk
(6) அறிவுத்திற அளவெண்-IQ
(7) கிரகித்தல்
(8) நுண்ணறிவியல் (சஞ்சிகைத் தொகுப்பு) பிரபல புத்தக சாலைகளில் கிடைக்கும்

*கமலம் பதிப்பகம்,*
*75/10 A, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(9512)

## இன்று ஒரு தகவல்

# மன இறுக்கம்

ஒருவர் "கோயிலுக்குப் போய் முடி இறக்கி விட்டு வரலாம் என்றிருக்கின்றேன்" என்று ஒருவருடமாகக் கூறிக் கொண்டிருந்தார். ஆனால்....ஒரு நாளாவது அவர் போனபாடுஇல்லை. "ஏன் சார் இப்படி அதைத் தள்ளிப் போட்டுக கொண்டு வருகிறீர்கள். ஒரு நாள் போய் மொட்டை போட்டுக் கொண்டு வந்துவிடவேண்டியது தானே" என்றேன். "நான் என்ன செய்வேன் சார் ஏகப் பட்ட வேலை. எப்போது பார்த்தாலும் டென்சன். கோவிலுக்குப் போக நேரமே கிடைக்கமாட்டேன் என்கிறது சார்" என்றார்.

ஒருவருடம் கழித்து ஒரு நாள் அவரைப் பார்த்தேன். தலை சுத்தமாக இருந்தது. "என்னசார்? கோவிலுக்குப் போய்விட்டு வந்து விட்டீர்கள் போலிருக்கிறதே" என்றேன். அவர் கோபமாக "நான் எங்கே சார் போனேன். அங்கே போகவேண்டிய அவசியமே இல்லாத அளவுக்கு முடியெல்லாம். தானாகவே கொட்டி விட்டது சார்" என்றார். "எதனால் இப்படி ஆனது?" என்றேன். "டென்சன்தான் இதற்குக் காரணம் என்று டாக்டர் சொல்கிறார்" என்றார் அவர்.

இது சிலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் கொத்துக் கொத்தாக முடி உதிர்வதற்கும் வழுக்கை விழுவதறகும் டென்சனும் ஒரு காரணம் என்பது தான் உண்மை. டென்சனால் என்னென்ன கோளாறு வரும் தெரியுமா? டாக்டர்களைக் கேட்டால் அவர்கள் ஒரு பட்டியலையே வரிசையாக சொல்கிறார்கள்.

தலைவலி,இடுப்புவலி,முதுகுவலி, அஜீரணம், மலச்சிக்கல், மூலம், சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம், இதயக் கோளாறு, ஹிஸ்டீரியா, வேறு சில மன நோய்கள், பெண்களுக்கான மாதாந்தக் கோளாறுகள், முடி உதிர்தல் போன்றன வரலாமாம்.

ஒருவர் கடுமையான டென்சனில் இருக்கிறார். அந்த சமயத்தில் அவரது வயிற்றினுள் ஆராய்ச்சி செய்து பார்த்தார்களாம். எப்படி என்கிறீர்களா? **Gastroscope** என்ற ஒரு கருவி மூலமாகத்தான். அப்படி ஆராய்ந்து பார்த்தபோது... இளஞ்சிவப்பாக இருக்க வேண்டிய அந்த உள் பகுதி செக்கச்செவேள என்று தக்காளிப் பழம் போலிருந்ததாம். ஏன் அப்படி ஆகிவிட்டது தெரியுமா? டெனசனாக இருக்கும் போது வயிற்றில் அமிலம் அதிகம் சுரக்குமாம். அதனால் இப்படி சிவந்து விடுகிறதாம். அடிக்கடி இப்படி ஆகிக்கொண்டிருந்தால் மனிதனுக்கு **Hyperacidity** என்ற நிலை உண்டாகிவிடும். அது முற்றிய நிலையில் அல்சராக கூட மாறிவிடுமாம்.

டென்சன் என்பது இயற்கை நமக்குக் கொடுத்திருக்கும் ஒரு எச்சரிக்கை உணர்வு. உடல் ரீதியான ஒரு தற்காப்பு உணர்வு. ஒரு ஆபத்து வரும்போது அதை எதிர்த்துப் போராடுவதற்கு அல்லது தப்பி ஓடுவதற்குத் தயாராகி விடுகிறோமல்லவா? 'அது தேவைதானே! ஆனால இப்போது உள்ள சூழ்நிலையில் எதற்கெடுத்தாலும் டென்சனுக்கு ஆளாகி விடுகிறோம். நமக்கு என்றொரு கௌரவத்தை எதிர்பார்க்கிறோம். அந்தக் கௌரவத்துக்கு ஒரு குறைவு வரும் போலிருந்தால் உடனே டென்சன். வர வேண்டிய பஸ் நேரத்திற்கு வந்து சேராவிட்டால் டென்சன்.

அனாவசியமாக உடலையும், மனதையும் போட்டு அலட்டிக் கொள்ளாதீர்கள் சார். எதையும் ஈசியாக எடுத்துக் கொள்ளுங்கள். எப்போதும் **Positive** ஆக யோசியுங்கள். **Negative** ஆக யோசித்துக் கொண்டிருக்காதீர்கள். வீட்டில் ஒரு பொருள் தீர்ந்து போய்விட்டால் 'அது இல்லை' என்று நினைக்காதர்கள். நாளைக்கு வாங்கலாம் என்று நினையுங்கள்.

எதற்கெடுத்தாலும் 'எனக்கு நேரமில்லை' என்று சொல்லும் பழக்கத்தை விட்டுவிடுங்கள்.எதையும் முறையாகத திட்டம் போட்டு செய்து கொண்டு வந்தால் எல்லாவற்றுக்கும் நேரம் இருக்கும். அது இல்லாமல் போய் விடாது. "எனக்கு இன்று நேரம் கிடைக்கவில்லை என்பதால் பல் விளக்கவில்லை" என்று யாராவது சொல்கிறீர்களா? பொறுப்பாக உங்கள் கடமையைச செய்யுங்கள். அதே நேரத்தில் ஆனந்தமாக இருக்கப் பழகிக் கொளளுங்கள். மன இறுக்கம் இல்லாமல் வாழும் வாழ்க்கைதான் மகத்தான வாழ்க்கை. அதிகமாக ஆசைப்படுவதும் டென்சனுக்கு ஒரு காரணம். ஒருவர் இருக்கிறார். அவர் எப்போதும் ஒரு சிறிய டென்சனுக்குக் கூட இடம் கொடுக்கமாட்டார். அதிகமாக ஆசைப்பட மாட்டார். ஒரு நாள் ஆண்டவனே அவரைத் தேடிக்கொண்டு வந்து "நீ எவ்வளவு காலம் உயிரோடு இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறாய்?" என்று கேட்டார். அதற்கு இவர் "நான் அதிகமாக ஒன்றும் ஆசைப்படவில்லை. நான் சாகும் வரை உயிருடன் இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அது போதும்" என்றாராம். டென்சனே இல்லாத ஆசாமி.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இலங்கைத் தமிழர் விடயத்தில்

# இந்தியா தொடர்ந்தும் தலையிடாவிடின் இந்திய பாதுகாப்பு நலனுக்கே பாதிப்பு

## தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் சுட்டிக்காட்டு

(தமிழ்நாடு)

**இலங்கை இனப்பிரச்சினையை தமிழர் பிரச்சினையாக மாத்திரமல்லாமல் இந்திய நலனுக்கான பிரச்சினையாகவும் நோக்க வேண்டுமென்ற நிலைப்பாடு தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ளது.**

இதனைத் தமிழ் நாட்டின் அரசியல்வாதிகள் இந்திய மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர். இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சமஷ்டி முறை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறிப்பிட்ட சமஷ்டி முறையில் தமிழீழ விடுதலைப்புலிகள் திருப்தி கொள்வார்களா? என் பதில் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு நம்பிக்கையில்லை. இதன் காரணமாக இந்திய மத்திய அரசாங்கம் இந்த விடயத்தில் மௌனம் சாதித்து வருகிறது.

இந்த நிலையில் இந்தியா தமிழர் விடயத்தில் தலையிடாக் கொள்கையைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்குமானால் அது இந்தியாவின் பாதுகாப்பு நலனுக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும்.

அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் என்பன இலங்கையில் தற்சமயம் மேற்கொண்டுவரும் தலையீட்டினை மையமாகக் கொண்டே இந்த வேண்டுகோள் தமிழ் நாட்டு அரசியல் வாதிகளினால் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

## குழந்தையை இனம்காண மீண்டும் மரபணுச்சோதனை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் போது கடத்தப்பட்டதாகக் கூறப்படும மூன்று மாதக் குழந்தையை இனம்காண்பதற்கு மரபணுப் பரிசோதனையை நடத்துமாறு கொழும்பு பிரதான நீதிமன்ற நீதவான் சரோஜினி குசால்லாவ வீரவர்த்தன உத்தரவிட்டுள்ளார்.

குழந்தைக்கு உரிமை கோரும் பெண்ணினதும் கடத்தியவர் எனச் சந்தேகிக்கப்படும் பெண்ணினதும் மற்றும் குழந்தையினதும் மரபணுப் பரிசோதனையை நடத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சமர்ப்பித்த அறிக்கையை பரிசீலனை செய்த பின்னரே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (த்-08)

## பொலிஸ் உத்தியோகத்தர் கொலை; மக்களிடமிருந்து வாக்குமூலம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்முனைக்குடி நகர மண்டபத்திற்கு அருகில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிந்த வேளையில் சுட்டுக்கொல்லப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்பாக பிரதேச மக்களிடம் இருந்து வாக்குமூலம் பெறப்படவிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் மோபப நாய்கள் மூலம் நடத்தப்பட்ட விசேட தேடுதலின் போது சந்தேக நபர்கள் தப்பிச் சென்ற பாதை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு ஏற்ப விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸ மேலும் தெரிவித்தனர். (ந-8)

## தற்காலிக வீடுகள் கையளிப்பு

(திருநெல்வேலி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதி மக்களுக்கென அமைக்கப்பட்ட தற்காலிக வீடுகள் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் மங்கள விளக்கை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு சுனாமி அனர்த்த செயலணிக் குழுப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச-43,9)

## உலகின் மிக உயரமான கட்டடம் இந்தியாவில்

(டில்லி)

உலகின் மிக உயரமான கட்டடம் இந்தியாவில் கட்டப்படவுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் நொயடாவில் இது உருவாகவிருக்கின்றது. இக் கட்டடத்தில் மொத்தம் 135 மாடிகள் அமைக்கப்படவுள்ளன.

508 மீற்றர் உயரம் கொண்ட இக கட்டடததின் வடிவமைப்பை மும்பாயைச் சேர்ந்த கட்டட வடிவமைப்பாளரான ஹா.்.பீஸ் என்பவர் உருவாக்கிக் கொடுத்துள்ளார்.

இதற்கு நொய்டா நகர வளர்ச்சிக் குழுமத்தின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

மேலும் இத்திட்டத்திற்கான சாத்தியக் கூறுகளை ஆராயக் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு மலேசிய நாட்டின் கோலாலம்பூரில் உள்ள பெடரோனஸ் இரட்டைக் கோபுரத்தை பார்வையிட்டு தகுந்த ஆலோசனைகளை வழஙகும் உலகில் தற்போது மிக உயரமான கட்டடம் தைவான் நாட்டின் தலைநகர் தைவேயில் அமைந்துள்ளது.

அடுத்த இடத்தில் பெற்றோனஸ் கோபுரம் உள்ளது. (க)

# உலக சந்தையில் ம.எண்ணெய் விலை 73 டொலராக அதிகரித்துள்ளது

(கொழும்பு)

உலக சந்தையில் என்றுமில்லாதவாறு எண்ணெய் விலை அதிகரித்திருப்பதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்திருக்கிறது.

பெறறோல்,டீசல் ஆகியவற்றின் விலைகளை விட மணணெண்ணெயின் விலை கூடுதலாக அதிகரித்திருக்கின்றது.

ஒரு பீப்பா மண்ணெண்ணெயின் விலை 73 அமெரிக்க டொலராக இருந்தது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலிய மெதகம இதுதொடர்பாக தகவல் தெரிவிகபும் போது ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 57 ரூபாவாக விலை மாற்றம் செய்யப்பட வேண்டியிருப்பதாகத் தெரிவித்தார்.

ஆயினும் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 25ரூபா ஐம்பது சதத்திற்கே தற்போது விற்கப்படுகிறது.

புத்தாண்டுக்காலத்தில் விலை அதிகரிப்புக் காரணமாக மக்களுக்கு சுமை ஏற்படாத வகையில் இவ்வாறு குறைந்த விலையில் விற்கப்படுகிறது. கூட்டுத்தாபனத்தில் கடந்த வருடம் இத்தகைய மானியம் காரணமாக ஏற்பட்ட நஷ்டம் 2ஆயிரத்து 800 மில்லியன் ரூபாவாகும். இம்மாதம் இத்தொகை மேலும் அதிகரிக்கும்.

எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (7)

## கற்கள் பறிக்கப்பட்டும் வீதி திருத்தப்படவில்லை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை முதலாம் கட்டை சந்தியில் இருந்து நாவலடிச் சந்திக்கும் செல்லும் பாதையில் திருத்தத்துக்காக கற்கல் பறிக்கப்பட்டு நீண்ட நாட்களாகியும் பாதை சொப்பனிடப்படாததால் இப் பாதையால் செல்லும் பயணிகள், பாடசாலை மாணவர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரியவருகிறது.

இவ் வீதியில் வி.எம்.றோட் சந்திக்கும் இடத்தில் பாரிய குழி ஒன்று இருந்து வருகிறது. இதனால் அடிக்கடி இச் சந்தியில் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

எனவே இப் பாதையை உடனடியாக திருத்தி அமைக்குமாறு பாடசாலை மாணவர்கள், பொற்றோர்கள், பயணிகள் ஆகியோர் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப் பாதையை 2ஆயிரத்திற்கும் மேற்பட்ட மூன்று பிரபல பாடசாலை மாணவர்கள் போக்குவரத்திற்குப் பயன்படுததுகின்றனர். அத்துடன் 751 ஆம் இலக்க பருத்தித்துறை -யாழ் பஸ்சேவையும் இதன் ஊடாக நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-35)

## புத்தாண்டை முன்னிட்டு சனநடமாட்டம் அதிகரிப்பு

(அம்பன்)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பருத்தித்துறை, நெல்லியடிப் பகுதியில் சன நடமாட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது.

சித்திரைப் புத்தண்டைக் கொண்டாடுவதற்காக புடவை உட்பட ஏனைய பொருட்களையும் வாங்குவதற்காக என்றுமில்லாதவாறு தற்போது சன நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்நிலையில் சில நாட்களுக்கு முன்னர் பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் சமாந்தரமாக துவிச்சக்கர வண்டிகளில் செல்லவேண்டாம் என்று அறிவுறுத்தினர். (ந-56)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 47



ஆறுமாதம் கழித்து வைகாசி மாதத்தில் கோயில் திறக்கும் போது, கார்த்திகை 1ஆம் திகதி கோயில் மூடும்போது ஏற்றிய திருவிளக்கு எரிந்து கொண்டேயிருக்கும். அதைக் காண ஆயிரக் கணக்கான மக்கள் கூடுகின்றார்கள். கோயில் கிழக்கு நோக்கியது. சுற்றி மலைகள் அளகாநந்தி தெற்கு நோக்கி ஓடுகின்றது. பனிக் கட்டி போல் மிக்கக் குளிர்ச்சியான நீர் அதன் அருகில் தான் வெந்நீர் குண்டம். மக்கற்கு மிக அநுகூலமாக அமைந்துள்ளது.

கோயிலுக்கு, கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் வருகின்றதாம். ஆசார அனுஷ்டானமுள்ள அர்ச்சகர்கள் பூசிக்கின்றார்கள்.

நாராயணர் அமர்ந்த திருக்கோலத்துடன் தவம் புரிகின்ற வண்ணம் காட்சி தருகின்றார். அவருக்கு இடப்புறத்தில் நரநாராயணர்கள். வலப்புறத்தில் உத்தவர், குபேரர் மற்றொருபுறம் நாரதர், கருடர், விநாயகர் இந்த மூர்த்திகள் இருக்கின்றனர். பிரகாரத்தில் லட்சுமி தேவி ஆலயம். இங்கு திருமால், மாதவம புரிந்துகொண்டே இருப்பதனால மாதவன் என்று பெயர் பெற்றார்.

இங்கு நின்று சேவிக்கும்பொழுது அடியிற்கண்ட வெண்பா என் நாக்கிலிருந்து வந்தது.

**புகழ்பத்ரி நாதனெனும் பூமானே! உன்னை**
**மகிழ்வுடனே காண்பதற்கு வந்தேன்-திகழ்தருநீ**
**எல்லா வுயிர்க்கும் இரங்கி யருள்புரிவாய்**
**நல்லார்க் கருள்நாரணா**

### ஒரு குறிப்பு

கேதாரத்துக்கும், பத்ரிகாச்ரமத்திற்கும் குறுக்கே வந்தால் 15 அல்லது 20 மைல்கள்தான் இருக்கும். ஆனால் அப்படி வர இய லாது. குறுக்கே வானோங்கிய மலைகள் இருக்கின்றன. இமயமலையில் இரு தலங்களும் இரு கண்கள் போல் திகழ்கின்றன. நடுவே நாசிபோல் மலை நிற்கிறது. மந்தாகினி நதிக்கரையில் கேதாரம், அளகாநந்தி நதிக்கரையில் பத்ரிநாதம்.

இருநதிகளின் வழியிலேதான் அந்தந்தத் தலங்கட்கு வழிசெல்கின்றது. இருநதிகளும் கூடுமிடம் உருத்திர ப்ரயாகை. 30.9.61 புரட்டாதி சனிக்கிழமை திருமாலுக்கு உகந்தநாள். நாராயணருக்கு அபிஷேக ஆராதனை அலங்காரங்கள் செய்தோம்.

### காலா கம்பளவாலா தருமம்

கருப்புக் கம்பளி உடுத்திருந்த ஒரு ஏழைப் பரதேசி காலணா காலணாவாக வாங்கி அடியிற கண்ட இடங்களில் யாத்திரிகர்கள் தங்கி நலம் பெறும்பொருட்டுத் தருமசாலை கட்டியுள்ளார்.

1. லட்சுமண ஜுலா
2. மகாதேவ சைன்
3. வியாசகாட்
4. தேவப்ரயாகை
5. ஸ்ரீநகர்
6. பட்டிசேரா
7. ருத்ரப்ரயாகை
8. அகஸ்தியமுனி
9. குப்தகாசி
10. ராம்பூர்
11. த்ரியுகநாராயண்
12. கௌரி குண்டம்
13. ராம்பாடா
14. கேதாரநாத்
15. ஊகிமட்
16. பணியாகுண்டு
17. துங்கநாத்
18. மண்டல்
19. சமோலிலாலாசாங்கா
20. கருடகங்கா
21. ஜோஷிமட்
22. பாண்டுகேஸ்வர
23. அநுமான்சட்டி
24. ஸ்ரீபதரிநாத்
25. லாம்பகாட்
26. இலங்கு கும்காசட்டி
27. பீபல்கோட்டி
28. கர்ணப்பிரயாகை

5.10.61 காலை ரிஷிகேசம் சேர்ந்தோம். 15-9-61 ரிஷிகேசத்திலிருந்து புறப்பட்டு கேதாரம், பதரி யாத்திரையை முடித்துக்கொண்டு 5-10-61இல் ரிஷிகேசம் சேர்ந்தோம். 21தலைமுறையும் உய்யும் பொருட்டு 21 நாட்கள் இமாசலத்தில் கடும் யாத்திரை செய்தோம்.

ஆனந்த குடீரில் பஸ்ஸைவிட்டு இறங்கியவுடன் சுவாமி சிவானந்தா அங்கேயே நின்று காட்சி

## 17ஆவது நாளாகவும் தொண்டர் ஆசிரியர்கள் சத்தியாக்கிரகப் போராட்டம்

(கொழும்பு)

கஷ்ட, அதிகஷ்ட என வேறு படுத்தாது நாடுமுழுவதிலும் உள்ள அனைதது்த் தொண்டர் ஆசிரியர் களையும் நிரந்தரமாக்க வேண்டு மென தொண்டர் ஆசிரியர்களின் பெற்றோர் சங்கம் கோரிக்கை விடுத்துள ளது.

அவ்வாறு இல்லாது விட்டால் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் அநீதி இழைக்கப்படலாம். சில மாகாணங் களைச் சேர்ந்த தொண்டராசிரியர் கள் இசுருபாயவில் அமைந்துள்ள கலவி அமைச்சுக்கு முன்பாக ஆரம் பித்த சத்தியாக்கிரகப் போராடடம் நேற்றும் 17ஆவது நாளாக தொடர் கின்றது.

இத் தொண்டராசிரியர்களுடன பௌத்த தேரர் ஒருவரும் உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ளார். (ற-8)

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விஷேட போக்குவரத்து ஒழுங்குகள்

(கொழும்பு)

தமிழ்-சிங்கள சித்திரைப் புத்தாண டுப் பண்டிகையை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் விசேட போக் குவரத்துச் சேவைகள் இன்று ஆரம் பமாகின்றன.

இந்தச் சேவைகள் எதிர்வரும் 25ஆம் திகதிவரை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தக் காலப்பகுதியில் 100ற்கும் அதிக மான விசேட ரயில் சேவைகளும் நடாத்தப்படுமென புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரி ஒரு வர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டையிலிருந்து கண்டி, பதுளை, ஹற்றன், மாத்தறை மற்றும் காலி நகரங்களை நோக்கி விஷேட ரயில்கள் சேவையில் ஈடு படுத்தப்படவுள்ளன.

அந்த நகரங்களிலிருந்து கோட்டை நோக்கி கடுகதி ரயில் சேவைகள் நடாத்தப்படவுளளன. இதேவேளை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கொழும்பிலிருந்து நாட்டின் பிரதான நகரங்களுக்கு விஷேட பஸ் சேவை களை நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

தொழிலாளர்களுக்கு வசதிக ளைச் செய்துகொடுக்க விரும்பும் நிறுவனங்கள் உரிய மாகாண போக குவரத்து அதிகாரசபையுடன் தொடர்பு கொண்டு பஸ்வண்டிகளைப் பெற முடியும்.

இதேவேளை கொத்தணி பஸ் நிறுவனங்களும் தேவைக்கு ஏற்ற விதத்தில் தூர இடங்களுக்கு பஸ் சேவைகளை நடத்துவதற்கான ஏற் பாடுகளை பூர்த்திசெய்திருக்கின் றன.

இந்தக் காலப்பகுதியில் மாகா ணங்களுக்கிடையிலான பஸ் சேவை களைக் கட்டாயமாக நடாத்த வேண் டுமென தேசிய போக்குவரத்து ஆணைக குழு வலியுறுத்தியுள்ளது. (ற-9)

## பாதிக்கப்பட்ட படகுகளை பழுதுபார்க்க உடனடி மானியம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பட குகளை பழுதுபார்ப்பதற்கு கடற் றொழில் நீர்வள அமைச்சு உடனடி மானியத்தை வழங்கவுள்ளது.

இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க திறைசேரிச் செயலாளருடனும் நிதி யமைச்சு அதிகாரிகளுடனும் பேச்சு வார்த்தைகளை நடதத்தியுள்ளார்.

இவற்றிற்கமைய இந்நிதிச் சலுகை மற்றும் இலகு கடன்களை இரண்டு வார காலத்திற்குள் அமைச்சு வழங்கவுள்ளது.

இதேவேளை, பெருமளவு எண் ணிக்கையிலான படகுகளை இல வசமாகத் திருத்துவதற்கும் அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. சீனோர் நிறுவனம் இதனை மேற் கொள்கின்றது.

பழுதுபார்க்க வேண்டிய சகல படகுகளும், இயந்திரங்களும் உட னடியாகப் பதிவுசெய்யப்பட வேண்டு மென அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ற-7)

## அதிபரின் இடைநிறுத்தத்தை ஆட்சேபித்து

யாத்திரையை முடித்துக்கொண்டு 5-10-61இல் ரிஷிகேசம் சேர்ந்தோம். 21தலைமுறையும் உய்யும் பொருட்டு 21 நாட்கள் இமாசலத்தில் கடும் யாத்திரை செய்தோம்.

ஆனந்த குடீரில் பஸ்ஸைவிட்டு இறங்கியவுடன் சுவாமி சிவானந்தா அங்கேயே நின்று காட்சி யளித்தார். எங்களைத் தாயினும் சிறந்த தயாவுடன் வரவேற்று உபசரித்தார். மலர்ந்த முகத்துடன் இன்னுரை வழங்கினார். எங்கள் அயர்ச்சி அனைத்தும் வள்ளலைக் கண்ட புலவனுடைய வறுமை போல் நீங்கியது.

சிவானந்தா தன் சீடர்களைப் பார்த்து "இன்று ஏகாதசி. ஆசிரமத்தில் யாவரும் உபவாசம். ஆனால வாரியார் களைத்து வந்திருக்கிறார். வடை, பாயசத்துடன் விருந்து வையுங்கள்" என்று பணித்து அருளினார்.

அன்று மாலை கங்கைக் கரையில் பஜனை நடந்தது. சுவாமிகளும் நாமாவளிகளைக் கூறினார். சுவாமிகள் அடியேனை "விரிவுரை செய்யுங்கள்" என்று கட்டளையிட்டார். அங்கிருந்த ஒரு அம்மை என்னிடம் பாதுகா பட்டாபிஷேகம் சொல்லுமாறு கூறினார். கங்கைக் கரையிலே கம்பனுடைய தமிழ்க் கடலில் சிறிது நீந்தினேன். அதில் அத்தனை பேரும் முழுகி ஆரவாரித்தார்கள். சுவாமிகள் பெரு மகிழ்ச்சியுற்றார். மூன்று மணிநேரம் பரதனுடைய பெருமையைப் பற்றி விரிவுரை செய்தேன். சுவாமிகள் மாலை சூட்டிப் பெரிதும் அன்புடன் வாழ்த்தி "அடிக்கடி இங்கு வரவேண்டும்" என்றார்.

மறுநாள் புறப்பட்டு, அயோத்தி ப்ரயாகை என்ற தலங்களைத் தரிசித்துவிட்டு 9-10-61 இல் காசியம் பதியை அடைந்தோம்.

## காசி

"காசியில் இறந்தால் முக்தி" என்று நூல்கள் கூறுகின்றன. காசியென்பது ஆக்ஞை (புருவநடு) புருவ நடுவில் நாட்டத்தை வைத்து நான் என்ற எண்ணம் இறந்தால் முத்தி கிடைக்கும்.

காசியில் கங்கைக்கும் பெருமை அதிகம். அதற்கு என்ன காரணம்? காசியில் மட்டும் கங்கை நேர் வடக்கு நோக்கிச் செல்லுகிறது. வடக்கு நோக்கிச் செய்யும் பூசை, ஜெயம் முதலியன அதிக பலன் தரும். அதுபோல் வடக்கு நோக்கி ஓடும் கங்கையில் நீராடினால் அதிக புண்ணியம். காசிக்கு வாரணாசி என்று ஒரு பெயர் உண்டு. வரணா அசி என்ற இரு நதிகள் சூழ்ந்திருப்ப தனால் இப்பெயர் பெற்றது. காசி முத்தித் தலங்கள் எழில் ஒன்று.

12-10-61 பாட்னாவை அடைந்தோம். பாட்னா பீஹார் மகாணத்திற்குத் தலைநகரம். பாட்னாவிலிருந்து விமான மூலம் நேபாளம் போக ஏற்பாடு செய்திருந்தோம். நாங்கள் ஒரு வாரம் தாமதித் துப் போனதால் இன்னும் 20 நாட்களுக்கு விமானத்தில் இடமில்லை என்று கூறிவிட்டார்கள். மறு நாள் புறப்பட்டு பரத்வான் என்ற புகைவண்டி நிலையத்தில் நான் தனியே அமர்ந்து பூசை செய்யும் பொழுது அருகில வைத்திருந்த மான் தோல் பையை ஒருவன் களவு செய்துவிட்டான். கண் மூடி தியானம் செய்து கொண்டிருக்கும் பொழுது அது மறைந்துவிட்டது.

அதில நான்குமுதல் வகுப்பு வட்ட சுற்றுப்பயண டிக்கட்டுகளும், மூன்றாவது வகுப்பு டிக்கட்டு ஒன்றும், மலாயா பாஸ்போர்ட்டும், கையெழுத்துப் பிரதிகளும் மூக்குக் கண்ணாடியும் இருந்தன. பின்னர் சென்னை வரை ஐந்து டிக்கட்டுக்களும் வேறு புதிதாக அடியேன் எடுத்து அதனை ஈடுசெய்தேன். கல்கத்தாவில் வைகுண்ட நாதர் கோயிலில் தங்கி அங்குள்ள ஆலயங்களை வழிபட்டோம். (தொடரும்)

# அதிபரின் இடைநிறுத்தத்தை ஆட்சேபித்து கல்லூரிச் சமூகம் ஆர்ப்பாட்டம்

கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அதிபர் சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து நேற்றுக்காலை அந்தக் கல்லூரிக்கு முன்னால் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

கல்லூரியின் பழைய மாணவர் கள, பெற்றோர்கள் மற்றும் கல்லூரி யின் ஆசிரியர்கள் ஆகியோர் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இதனால் மருதானைப் பகுதி யூடான போக்குவரத்து சிறிதுநேரம் தடைப்பட்டதாக பொலிஸார் தெரி வித்தனர். இவ் ஆண்டு 1ஆம் தரத் திற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் முறைகேடுகள் நடந் திருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டு பிரஸ்தாப அதிபர் கல்வி அமைச் சினால் சேவையில் இருந்த இடை நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (ற)



**இலங்கை வங்கியின் யாழ்.மேற்தரக் கிளையினால் யாழ்.வேம்படி மக ளிர் உயர்தரப் பாடசாலையில் கடந்த 4ஆம் திகதி சிறுவர் சேமிப்பு பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.**

**இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணி யம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (படம்:- ஞா.ஐங்கரன்)**

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# உதிர்ந்தாலும் வாடாத மணம் வீசும் மலர்

"இப் பாரிய பொறுப்பை ஏற்க எனக்குத் தயக்கமாகவும், பயமாக வும் இருக்கிறது. எனினும் ஆண்ட வனின் விருப்பத்திற்கு அடிபணிந்து அன்னை மரியாள் மீது நம்பிக்கை வைத்து இப் பாரிய பொறுப்பை ஏற் றுக்கொள்கிறேன். இப் பணிக்காக என்னை முழுமையாக அர்ப்பணிக் கிறேன்."


பாப்பரசராகப் பொறுப்பேற்கும் போது

264 ஆவது திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்பட்டவுடன் மக்கள் முன்தோன்றிய 2 ஆம அருளப்பர் சின்னப்பர் மிகுந்த அடக்கத் துடன் இவ்வாறு கூறினார்.

உலகிலுள்ள 100 கோடி ரோமன் கத் தோலிக்க மக்களின் கண்கண்ட தெய்வமாக வும், தலைவராகவும் திகழ்ந்த பாப்பரசர் 2 ஆம் அருளப்பர் சின்னப்பர் கடந்த ஞாயிற் றுக்கிழமை (03-04-2005) தனது 84 ஆவது வயதில் நித்திய இளைப்பாற்றையடைந்தார்.

455 ஆண்டுகளுக்குப் பின் முதல்முறை யாகத் தெரிவுசெய்யப்பட்ட இத்தாலியர் அல்லாத பாப்பரசர் இவர் தான். அதுமட்டு மல்ல பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்ட முதற்போலந்துப் பிரஜையும் இவர் தான்.

திருத்தந்தை 2 ஆம் அருளப்பர் சின்னப் பரின் இயற்பெயர் கரோல் வெயிற்லா (COR OL WOJT YLA) போலத்திலுள்ள இரா கோவ் நகரத்து கர்தினால் அதிமேற்றாணி யராக இருந்த போது 1978 அக்டோபர் 16 இல் பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்டார்.


சுமார் 2000 வருடம் பாரம்பரியத்தைக் கொண்ட ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை யின் வரலாற்றிலே, 3 ஆவது நீண்ட ஆட்சிக் காலத்தைக் கொண்ட பாப்பரசர் 2 ஆம் அரு ளப்பர் சின்னப்பர் 26 வருடங்கள் 5 மாதங்கள் நாட்கள் இறைவனின் மேய்ப்புப் பணிச் சேவையைச் செய்துள்ளார்.

மிகவும் நீண்ட பாப்பரசர் ஆட்சிக் கால மென 34 வருடங்கள் தலைமை தாங்கிய வண. பீற்றரின் காலம் கருதப்படுகிறது. எனி னும் பல பாப்பரசர்கள் மாதமொன்றோ அல் களுக்கு தலைமை தாங்கியுள்ளார்.



☛ 14 சுற்றறிக்கைகள், 45 திருத்தூதர் கடிதங்கள், 14 சமயச் சொற்பொழிவுகள் மற்றும் 11 திருத்தூதர்களுக்குரிய சட்டங் கள் உள்ளடங்கிய 114 நீண்ட ஆவணங் களை தயாரித்துள்ளார்.

☛ கடந்த 4 நூற்றாண்டுகளில் இவ ருக்கு முன்னர் ஆண்ட பாப்பரசர்களின் மொத்த சாதனையை விஞ்சும் அளவுக்கு 1,338 மக்களுக்கு திருச்சபை அங்கீகாரம் அளித்தும் 482 புனிதர்களை தூய் மைப்படுத்தியுள் ளார்.


உலகிற்காக செபிக்கும் போது

☛ 231 கர்தி னாக்களை நிய மனம் செய்யப் பட்டதுடன் அவர் களில் 183 பேர் இன்னும் உயிர் வாழ்வதுடன் 117 பேர் 80 வயதிற் குக் குறைந்தவர் கள். மற்றும் அவர் கள் புதிய பாப்பர சர் தேர்ந்தெடுக் கும் கூடத்திற்குள செல்லும் தகுதி பெற்றவர்களாக உள்ளனர்.

☛ 776 ஜனா திபதிகள், 246 பிர தமர்கள் அடங்க லாக 1,600 அரசி யல் தலைவர்க ளுடன் சந்திப்பு களை மேற்கொண டுள்ளார்.

☛ 1995 ஆம் ஆண்டு மணிலாவில் இடம்பெற்ற இவரின் திருச்சபைப் பிரார்த் தனைக்கே மிகக் கூடியளவு மக்கள் திரண்டு வந்திருந்தனர். (4 மில்லியன் மக்கள்)

☛ 1989 இல் ஸ்கண்டினேவிய நாடு களுக்கு மேற்கொண்ட விஜயமொன்றின் போது இடம்பெற்ற திருச்சபைப் பிரார்த்த னைக் கூட்டத்திற்கே மிகக் குறைந்தள விலான மக்கள் பங்குகொண்டனர். 200 பேர் சமுகமளித்திருந்தனர்.

☛ பாப்பரசரால் விஜயம் செய்யப்பட்ட மிகக குறுகிய பெயரைக் கொண்ட நகர் டென மார்க்கிலுள்ள ஓம் நகராகும். (1989 ஜூன், 07)

☛ மிக நீண்ட பெயரைக் கொண்ட நகர், மெக்சிக்கோவிலுள்ள அகுவாஸ்கலியன்டஸ் ஆகும். (1990 மே, 08)

## நோய்களுடன் போராடிய பாப்பரசர்

1981 மே 13 : செயின்ட் பீற்றர்ஸ் சதுக் கத்தில், மெஹ்மது அலி 'கெக்ஷா என்ற இளைஞன் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரை சுட்டான். அடிவயிற்றில் அவ ருக்கு காயம் ஏற்பட்டது. 5 மணிநேரம் அவ

1999 ஜூன் 15 : அவரது சொந்த நாடான போலந்தில் உள்ள கிராகோவ் நகரில் திருப் பலி நிகழ்ச்சிக்குப் பின்னர் அவருக்கு கடு மையான புளு காய்ச்சல் ஏற்பட்டது.

2002 மார்ச் : மூட்டு வலியால் பாப்பரசர் அவதிப்பட்டார்.

2003 மே 17 : 'பர்க்கின்சான் நோயால் போப் அவதிப்படுகிறார்' என்று வத்திக்கான் அதிகாரிகள் அறிவித்தனர்.

2004 ஜூன் 31 : லேசான புளு காய்ச் சலால் போப் பொது நிகழ்ச்சிகளை ரத்து செய்தார்.

2005 பெப். 1 : புளு காய்ச்சல் மற்றும் தொண்டையில் ஏற் பட்ட தொற்று நோய் காரணமாக, ரோம் கெமிலி மருத்துவ மனையில் பாப்பரசர் அனுமதிக்கப்பட்டார். அங்கு 10 நாள் தங்கி சிகிச்சை பெற்றார். முதல் முறையாக திரு நீற்றுப் புதன் நிகழ்ச்சி யில் அவர் பங்கேற்க வில்லை.

2005 பெப். 24 : பாப் பரசருக்கு காய்ச் சலில, மூச்சுவிடுதலில பிரச்சினை மற்றும் பேசுவதில் சிரமம் ஏற் பட்டது. மீண்டும் ரோம மருத்துவ மனை யில் அனுமதிக்கப்பட் டார். அவருக்கு மூச் சுக் குழல் அறுவைச் சிகிச்சை மேற்கொள் ளப்பட்டது.

2005 மார்ச் 1 : அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் முதல் முறையாக பேசினார்.

2005 மார்ச் 13 : மருத்துவமனையி லிருந்து பாப்பரசர் வத்திக்கான் திரும்பினார்.

2005 மார்ச் 20 : ஈஸ்டர் திருச்சபை பணிகளில் பாப்பரசர் பங்கேற்கவில்லை. அவர் சார்பில் வத்திக்கானில் கார்டினல் அப்பணியில் பங்கேற்றார்.

2005 மார்ச் 24 : எதிர்பார்ப்புக்கு மாறாக திடீரென ஜன்னலில் போப் தோன்றி ஈஸ்டர் ஆசீர்வாதம் வழங்கினார்.

ஒக். 16, 1978- 455 வருட காலத்தில் இத்தாலியர் அல்லாத முதல் பாப் பரசராக தெரிவு செய்யப்படுகிறார். ஆறு நாட் களின் பன்னர் சேவைக்காலம் ஆரம்பமாகிறது.

ஜூன் 2-10, 1979 - கம்யுனிச ஆட்சி நாடான தனது தாயகத்துக்குத் திரும்புகிறார். கூட் டொருமை இயக்கத்தின் எழுச்சியின் காரணி யாகக் கருதப்பட்ட பயணம் இது.

மே 13, 1981- துருக்கியைச் சேர்ந்த மெஹ் மட் அலி அக்ஸா என்பவரால் சென். பீற்றர்


வத்திக்கான் தோட்டத்தில் ஓய்வில் இருக்கும் போது

சதுக்கத்தில் வைத்து துப்பாக்கிச் சூட் டுக்கு இலக்காகி, சத்திர சிகிச்சையின் பின் னர் உயிராபத்தின்றித் தேறுகிறார்.

மே 12, 1982- புரட்சிகர ஸ்பானிய பாதிரி யான ஜவுவான் பெர்னாண்டஸ் க்ரோஹன் பாதிமாவில் வைத்து பாப்பரசரைக் கத்தி

**தொகுப்பு : நோயல்**

யால் குத்த முயற்சிக்கிறார். எனினும், அனர்த் தம் எதுவும் நேரவில்லை.

ஜூன் 8-14, 1987- அவரது தாயகத்துக் கான மூன்றாவது விஜயத்தின் போது, தடை செய்யப்பட்டிருந்த கூட்டொருமை வர்த்தக ஒன்றியத்தை பலமாக ஆதரிக்கிறார்.

ஜூன் 25, 1987- ஆஸ்திரிய ஜனா திபதி குர்த் வெல்டெய்மை வர வேற்கிறார். இது வெல்டெய்மை நாஸிஸ யுத்தகாலக் குற் றச் செயல்களுக்காக எதிர்த்து வந்த யூதர்களிடையே கோபத்தை உண்டு பண்ணுகிறது.

டிசம். 1, 1989 - ஜனாதிபதி மிகெய்ஸ் கோர்பச்சேவ் பாப்பரசரை சோவியத் யூனிய னுக்கு வருகை தருமாறு அழைப்பு விடுக் கிறார். பாப்பரசர் இவ்வழைப்புக்களை ஒரு

### அன்பு இதயங்களை மாற்றும் சமாதானத்தை மற்றவர்களுக்கு வழங்கும்

2005 மார்ச் 30 : 'பாப்பரசருக்கு குழாய் வழியாக உணவு வழங்கப்படுகிறது' என்று வத்திக்கான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

2005 மார்ச் 31 : கடும் காய்ச்சல்



தன்னைக் கொலை செய்ய முயன்றவரை 1983 இல் சிறையில் சந்தித்த போது

லது அதைவிட குறைவான காலத்திற்கே ஆட்சி செலுத்தியுள்ளனர்.

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்கு (ஜோன் போல் 01) முன்னர் தலைமை தாங்கிய ஜோன்போல் 01 33 நாட்கள் மட்டும் ஆட்சியிலிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1978 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் திகதி தனது ஆட்சிக்காலத்தை ஆரம்பித்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தனது ஆட்சிக் காலத்தில்,

☛ மொத்தமாக 1247613 கி.மீ. தூரம் பயணம் செய்துள்ளார். இது பு,மிக்கும் சந்திரனிற்குமிடையிலான தூரத்தின் 3.24 மடங்காகும்.

☛ இத்தாலிக்கு வெளியே 104 சுற்றுலாக்களை மேற்கொண்டுள்ளார்.

☛ 129 நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

☛ இத்தாலியில் 146 பயணங்கள் மேற்கொண்டுள்ளார்.

☛ ரோமிலுள்ள திருச்சபை வட்டாரங்களுக்கு 301 தடவை விஜயம் செய்துள்ளார்.

☛ வத்திக்கானுக்கு வெளியே மேற்கொண்ட பயணங்களில் 822 நாட்களை செலவிட்டுள்ளார்.

☛ 20,000 இற்கும் அதிகமான பிரசங்கங்களை நிகழ்த்தியுள்ளார்.

☛ சுமார் 100,000 பக்கங்களைக் கொண்ட பிரசங்கங்களை நிகழ்த்தியுள்ளார்.

☛ சுமார் 17.8 மில்லியன் மக்கள் சமூகமளித்திருந்த 1,161 பொது வைபவங்

மார்க்கிலுள்ள ஒம் நகராகும். (1989 ஜூன், 07)

☛ மிக நீண்ட பெயரைக் கொண்ட நகர், மெக்சிக்கோவிலுள்ள அகுவாஸ்கலியன்டஸ் ஆகும். (1990 மே, 08)

## நோய்களுடன் போராடிய பாப்பரசர்

1981 மே 13 : செயின்ட் பீற்றர்ஸ் சதுக்கத்தில், மெஹ்மது அலி கெக்ஷா என்ற இளைஞன் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரை சுட்டான். அடிவயிற்றில் அவருக்கு காயம் ஏற்பட்டது. 5 மணிநேரம் அவருக்கு அறுவைச் சிகிச்சை நடந்தது.

1981 ஆகஸ்ட் 5 : சுடப்பட்டதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட உடல்நல பிரச்சினைகளுக்காக பாப்பரசர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மீண்டும் அறுவைச் சிகிச்சை நடந்தது.

1992 ஜூலை 15 : பெருங்குடலில் இருந்த கட்டியை நீக்க பாப்பரசருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

1993 நவ. 11 : சரிந்திருந்த தோள் பட்டையை சரிசெய்ய பாப்பரசர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார்.

சமாதானத்தை வேண்டி புறா பறக்க விடும் போது



1994 ஏப். 29 : கீழே தவறி விழுந்ததால் பாப்பரசரின் கால் எலும்பு முறிந்தது. இடுப்பு எலும்பு மாற்று அறுவை சிகிச்சையும் அப்போது செய்யப்பட்டது.

1996 மார்ச் 13 : குடலில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அருளப்பர் சின்னப்பர் அவதிப்பட்டார். பொது நிகழ்ச்சியையும் அவர் ரத்து செய்தார்.

1997 பெப். : புளு காய்ச்சலால் அவதிப்பட்டார்.

ஆசீர்வாதம் வழங்கினார்.

# அன்பு இதயங்களை மாற்றும் சமாதானத்தை மற்றவர்களுக்கு வழங்கும்

2005 மார்ச் 30 : 'பாப்பரசருக்கு குழாய் வழியாக உணவு வழங்கப்படுகிறது' என்று வத்திக்கான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

2005 மார்ச் 31 : கடும் காய்ச்சல் மற்றும் சிறுநீரக குழாய்த் தடத்தில் ஏற்பட்ட தொற்று நோய் காரணமாக போப் மிகவும் பாதிப்படைந்தார். மாரடைப்பும் ஏற்பட்டது.

## பாப்பரசரின் முக்கிய நிகழ்வு

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலமான பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் வாழ்விலும் சேவைக் காலத்திலும் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளும் வாழ்க்கைச் சுருக்கமும்:

மே 18, 1920 - போலந்திலுள்ள வடோவைஸ் எனும் ஊரில் இராணுவ வீரரான தந்தையாருக்கும் லிதுவானியன் வழித்தோன்றலான தாயாருக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தார். இயற்பெயர் கரோல் யோசப வோஜ்ட்ய்லா.

1942- நாஸிகளின் ஆக்கிரமிப்புக் காலப்பகுதியில் மிக நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களை இழந்த நிலையில், இரகசியமாக பாதிரியார் படிப்பைத் தொடங்கினார்.

நவ. 1, 1946- க்ராகோவில் பாதிரியாராக்கப்படுகிறார். ரோமிலுள்ள பாப்பரசர் சர்வகலாசாலையில் கல்வியை முடித்து போலந்து திரும்புகிறார்.

செப். 28, 1958- க்ராகோவின் உதவி ஆயராக நியமிக்கப்படுகிறார்.

ஜன. 13, 1964- க்ராகோவின் தலைமைக் குருவாக நியமிக்கப் படுகிறார்.

ஜூன் 26, 1967- பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் அவர்களால் நியமன அதிகாரமுடைய பாதிரியாராக்கப்படுகிறார்.

கோர்பச்சேவ் பாப்பரசரை சோவியத் யு,னியனுக்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கிறார். பாப்பரசர் இவ்வழைப்புக்களை ஒரு



1981 ஆம் ஆண்டு மே 13 ஆம் திகதி புனித பீட்டர் சதுக்கத்தில் பாப்பரசர் பிரார்த்தனை நடாத்திய போது முஹமட் அலி அக்ஸா என்பவன் துப்பாக்கியால் சுட்டான். அப்போது அவர் காயமடைந்து கீழே விழும் போது.

போதும் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஏப்ரல் 21, 1990 - ஜனாதிபதி வக்வால் ஹவெலுடன் கம்யு,னிஸ வீழ்ச்சியை முன்னிலைப்படுத்தும் பொருட்டு செக்கொஸ் லோவாகியாவுக்குச் செல்கிறார்.

ஒக். 18, 1990- கிறிஸ்தவ மதத் தலைவர்களுடனான ஒன்றுகூடலின்போது திருமணபந்தத்துடனான மதகுரு வாழ்வை நிராகரிக்கிறார்.

ஒக். 31, 1992- பு,மி சூரியனைச் சுற்றி வருகிறது என்று சொன்னமைக்காக கிறிஸ்தவ தேவாலயங்களால் அவதூறு செய்யப்பட்டிருந்த கலிலியோவை 359 வருடங்களுக்குப் பிறகு பாப்பரசர் மீள அங்கீகரிக்கிறார்.

(தொடரும்)


## வௌவாலுக்கு இரவில் கண் தெரியுமா?

தெரியாது. வௌவால் கண்மூலம் பார்த்து வழியைத் தெரிந்துகொள்வதில்லை. வௌவால் வாயிலிருந்து நம் காதுகளுககுக் கேடகாத சத்தத்தை எழுப்புகிறது. எதிரே தடை இருக்குமானால் அந்தச் சப்தம் திரும்பி வந்து வௌவாலின் காதில் எதிரொலியாக விழுகிறது. இப்படி எதிரொலி கேட்பதையும், கேட்காததையும் கொண்டு வௌவால் எதிலும் மோதிக்கொள்ளாமல் பறக்கிறது,

## அணைகளும் நிலநடுக்கமும்

பெரிய அளவிலான அணைகளினால் தான் நிலநடுக்கங்கள் தோன்றுகின்றன என சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் நிபுணர்களும தொடர்ந்து கூறிகொண்டே வருகின்றனர்.

மனிதனின் தேவைக்காக இயற்கையின் போக்கைத் தேக்கும் வகையில் அணைகள் கட்டப்பட்டன. அணைகட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் அடிப்படையில் அணைகளை கல் அணைகள், கடற்கரை அணைகள, மண் அணைகள், மர அணைகள் என 4 வகையாகப் பிரிக்கலாம். கட்டுமான அமைப்பின அடிப்படையில் அணைகளை எடை அணைகள், முட்டுச்சுவர் அணைகள் என வகைப்பாடு செய்யலாம்.



பயன்பாட்டின் அடிப்படையில் அணைகளை பாசன அணைகள், மன்நிலைய அணைகள், நீர் வழங்கல் அணைகள், பல்நோக்கு அணைகள், வெள்ளக கட்டுப்பாடு அணைகள் எனப் பிரிக்கலாம்.

உலக அளவில் பேரளவு அணைகள் பெரிய சர்ச்சைக்குரியவைகளாக இருந்து வருகின்றன.

குஜராத்தில் சர்தார் சரோவா அணை நிலஈர்ப்புவகை அணை ஆகும். தாழ் அடிமானத்திலருந்து 137 மீற்றர் உயரத்தில் இந்த அணை உள்ளது. இந்த அணையின் உயரத்தை அதிகரிக்கக்கூடாது என மேதாபட்கர், 'நர்மதா பச்சோவ் அந்தோலன்' என்ற அமைப்பையே தொடங்கினார். சுப்ரீம் கோர்ட் நர்மதா அணையின் உயரத்தை அதிகரிக்க அனுமதி வழங்கிவிட்டது.

துருக்கியல் யூப்ரடிஸ் நதியின் குறுக்கே கட்டப்பட்ட கெபான், ஈரானில் தேஜ் நதியின் குறுக்கே உள்ள பாகுலெவி, எகிப்தின் நைல நதியின் குறுக்கே கட்டப்பட்ட சார் எல் ஆலி, பாகிஸ்தானில் சீலம் நதியின் குறுக்கே உள்ள மங்களா, சிந்துநதியின் குறுக்கே கட்டப்பட்ட தார்பேலா குறித்து அவ்வப்போது சர்ச்சைகள் எழுந்துவருகின்றன.

நீருக்கே உள்ள இயல்பான போக்கான பாயும் தன்மையையும், தாழிடம் நோக்கிச் செல்லும் தன்மையையும் அணைகள் தடுப்பதால் ஏற்படும் அழுத்த அதிகரிப்பு அணையைச் சார்ந்த நிலப்பகுதியில் நிலநடுக்கமாக வெளிப்பட்டு சமன் செய்யப்படுகிறது என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கருதுகின்றனர்.

இந்தியா, இலங்கை போன்ற விவசாயத்தைச் சார்ந்த நாடுகளில் அணைகள் தவிர்க்க முடியாதவை என்றும், ஜீவ நதிகளின் வெள்ளப்பெருக்கு சேதங்கள் அணைகளினால்தான் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.


## இளம் வயதில்



ழிவு மற்றும் இதய நோய்களுக்கு மிகப்பெரிய காரணி என்று ஏற்கனவே பல்வேறு ஆராய்ச்சிகள் மூலம் நிரூபித்துள்ளனர்.

இந்நிலையில் உடல் பருமன் அதிகரிக்கும் போது அங்கே இதயநோய் ஆபத்துக்களும் அதிகரிப்பதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. அங்கு ஒரு சில மாகாணங்களில் குண்டுக் குழந்தைகளின் எண்ணிக்கை கவலைப்படும்படியாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல - 54



*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப போட்டி இல - 54**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

........................................

........................................

இங்கே வெட்டுக ------------------------------------

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 14ஆம் த்கதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

### இடமிருந்து வலம்

(1)வெள்ளரசுக் கிளையை இலங்கைக்குக் கொண்டுவந்தவர். (5)அரை - இப்படியும் கூறலாம். (7)ஐரோப்பியரின் வருகையின்போது இலங்கையின் ஒரு ராசதானி. (9)வெளிச்சம் தருவது குழம்பியுள்ளது. (10)குழந்தை அழும் ஒலியைக் குறிப்பது. (11)வாந்தி - இப்படியும் கூறுவர். (12)நீர் எடுப்பதற்கு பயன்படும் சாதனம். (13)இவள்தான் இராமாயணத்தின் கூனி. (14)அரங்கேறுவதற்கு முன் அறையில் நடத்துவது.

### மேலிருந்து கீழ்

(1)இந்த மலையைத் தூக்கிகொண்டு இலங்கைக்கு வந்தாராம் அனுமன். (2)கட்டுப்படுத்துவதற்குக் குதிரையின் வாயில் இடும் வடம். (3)தற்பெருமை காட்டும வலிமை. (4)'வழி' (கீ.மே). (6)ஒரு நட்சத்திரம் சிவனுக்குறியது. (8)சுவையும் விட்டமின் சி யுமுள்ள மரக்கறி. (10)குறிப்பிட்ட காலத்திற்கு மதிப்பீடு செய்துகொடுத்துப் பெறுவது. (11)சாலைகள் சேருமிடம். (12)இராமனால் கொல்லப்பட்ட வானரத் தலைவன். (13)தயிர் கடையப் பயன்படும் கருவி குறையில் உள்ளது.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.52 இன் விடைகள்**

## இளம் வயதில்



அமெரிக்க இதய அமைப்பு அண்மையில் விடுத்துள்ள ஒரு எச்சரிக்கை அந்நாட்டு மக்களை அதிர்ச்சிடையச் செய்துள்ளது. அந்நாட்டில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ஏராளமான குழந்தைகள் இதய நோயாளிகளாக மாறும் ஆபத்து இருப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் என்ன தெரியுமா? உடல பருமன் தான்.

அமெரிக்காவில் 12 முதல் 19 வயது வரையிலான இளம் பருவத்தில் உடல்பருமனான குழந்தைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. உடல் பருமன் நீரிழிவு மற்றும் இதய நோய்களுக்கு மிகப்பெரிய காரணி என்று ஏற்கனவே பல்வேறு ஆராய்ச்சிகள் மூலம் நிரூபித்துள்ளனர்.

இந்நிலையில் உடல் பருமன் அதிகரிக்கும் போது அங்கே இதயநோய் ஆபத்துக்களும் அதிகரிப்பதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. அங்கு ஒரு சில மாகாணங்களில் குண்டுக் குழந்தைகளின் எண்ணிக்கை கவலைப்படும்படியாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

## உடல் பருமன்

உடல் பருமன் அதிகரிப்பதால் உடலின் இன்சுலின் செயல்பாடு பாதிக்கப்படுவதால் இரத்தத்தில் சர்க்கரை அளவு மிகுந்த நீரிழிவு வியாதி உண்டாகிறது. மற்றொன்று, இதய இரத்தநாளங்களில் அடைப்புகள், கடினமாதல், செயல்திறன் குறைந்து வடுதல் எனப் பல பிரச்சினைகள் உணடாவதால், அது கொடிய இதயநோய்களுக்கு வித்திடுகிறது. டீன் – ஏஜ் பருவம் என்று இல்லாமல் அதற்கு முந்தைய குழந்தைப் பருவத்திலும் காணப்படும் உடல் பருமன் அந்தக் குழந்தைகள வயது வந்த காலத்தில் தீராத நோயாளிகளாக மாற்றி விடுகிறது.

நம் ஊரில் பெரும்பாலான மககளுக்கு இன்னமும் விபரம் தெரியவில்லை. கொழுக் மொழுக் என்று தளதளவென இருந்தால்தான் அழகு. அது தான் ஆரோக்கியம என்று நினைக்கிறார்கள். ஆனால் உண்மை அதற்கு நேர்மாறாக உள்ளது.

---

## உங்களுக்குத் தெரியுமா?

*Vote என்ற ஆங்கிலச் சொல் Voice of Tax Payers Every Where என்ற சொற்களின் முதல் எழுத்துக்களைக் கொண்டு உருவானது. அக்காலத்தில் வரி செலுத்துவோருக்கு மட்டுமே வாக்குரிமை இருந்தது.

*மின்னல் ஒரு வினாடிக்கு 28500 மைல் வேகத்தில் பூமியை நோக்கிப் பாய்கிறது. ஒரு மின்னலில் 2500 கோடி வாட்ஸ் மின்சக்தி உள்ளது.

*அணுகுண்டு வெடிக்கும்போது சத்தமே இருக்காது. பிரகாசமான வெளிச்சம்தான் வரும். இதைப் பார்த்தால் கண் குருடாகிவிடும்.

(1)இந்த மலையைத் தூக்கிகொண்டு இலங்கைக்கு வந்தாராம் அனுமன். (2)கட்டுப்படுத்துவதற்குக் குதிரையின் வாயில் இடும் வடம். (3)தற்பெருமை காட்டும வலிமை. (4)'வழி' (கீ.மே). (6)ஒரு நட்சத்திரம் சிவனுக்குறியது. (8)சுவையும் விட்டமின் சி யுமுள்ள மரக்கறி. (10)குறிப்பிட்ட காலத்திற்கு மதிப்பீடு செய்துகொடுத்துப் பெறுவது. (11)சாலைகள் சேருமிடம். (12)இராமனால் கொல்லப்பட்ட வானரத் தலைவன். (13)தயிர் கடையப் பயன்படும் கருவி குறையில் உள்ளது.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.52 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1.சுனாமி 3.மடம் 5.பூரி 6.கவி 7.திருப்பாச்சி 10.திரவம் 12.பூசம், மகம், மனம், பூரம், மூலம்

**மேலிருந்து கீழ்**

1.சுதந்திரம் 2.பூமி 4.சிகரம் 8.பாரதி 9.மாதம் 11.ரதி

### பரிசு பெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | K.பிரதீபன்<br>காரைநகர் வீதி,<br>யாழ்ப்பாணம். |
| இரண்டாம் பரிசு | :- | லோ.சுவஸ்திகா<br>வல்வெட்டி<br>வல்வெட்டித்துறை. |
| மூன்றாம் பரிசு | :- | சுபாஷினி<br>ஆம் கட்டை,<br>கட்டுடை,<br>மானிப்பாய். |

**போடடியில கலந்துகொண்டு பாராட்டுபபெறும் அத'ஷடசாலிகள'ன் பெயர் வபரம்**

ஞா.இராஜோதயன், கோப்பாய். ச.ஹோகுலதர்சன், சாவகச்சேரி. ம.மைதிலி, கோண்டாவில். இ.வசந்தினி, ஏழாலை. R.இராஜகாந்தி, கொக்குவில். வி.செல்வநாயகம், புத்தூர். சி.டர்சிகா, யாழ்ப்பாணம். கே.இராஜகோபால, வட்டுகோட்டை. சி.விந்துஷா, புத்தூர். கே.அரசேஸ்வரன், நல்லூர்,

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும் - குறள்

வலம்புரி

# ரணிலின் பலம் வீழும் அபாயம்

அரசியலில் நிரந்தர நட்பும் இல்லை. நிரந்தரப் பகையும் இல்லை. இன்று மேடையில் நின்று கண்டபாட்டில் பேசுவார்கள். நாளை ஒன்றாகக் கூடி நிற்பார்கள். இதனைப் பார்க்கின்றவர்களுக்கு தூக்கிவாரிப் போடும்.

இவரா அவரைப் பற்றி அப்படிப் பேசினார். நம்பவே முடியவில்லை என்று வாயில் கைவைக்கும் அளவில் அரசியல்வாதிகளின் தகிடதத்தோம் இருக்கும். எனினும் அரசியல் கலாசாரத்தில் இவையெல்லாம் சகஜம் என்று கூறுவதனூடாக அரசியல்வாதிகள் தம்து திருக்கூத்தை மறந்து மக்கள்முன் தோன்றுவர். இந்நிலைமை தென் கிழக்காசிய நாடுகளில் அதிகமாகக் காணப்படுவதாயினும் இலங்கைக்கு முதலிடம் கொடுத்து விடலாம்.

ஆம், இலங்கையில் தீர்க்கமுடியாதவாறு பிரச்சினை இறுகிப்போயிருப்பதற்கு அடிப்படைக் காரணம் அரசியல்வாதிகளின் நேர்மையீனமாகும்.

அதாவது தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணலாகாது. தமிழர்களின் போராட்டத்தை நசுக்குவதன் மூலமே சிங்கள மக்களின் ஆதரவைப் பெறமுடியுமென சிங்கள அரசியல்வாதிகள் கருதினர். இதில் மேற்போந்த கருத்துக்கு எதிராகச் செயற்பட்ட - தமிழ்மக்களுக்கு இருக்கக் கூடிய பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டுமென தீர்க்கதரிசனத்துடன் சிந்தித்த சிங்கள அரசியல்வாதிகள் புறந்தள்ளப்பட்டனர்.

இவ்வாறு தாம் புறந்தள்ளப்பட்டதற்கான காரணம் தமிழ்மக்களுக்காக கருத்துத் தெரிவித்தமை என்பதைப் புரிந்துகொண்ட அவர்களும் தமது கோலத்தை மாற்றிக்கொண்டார்கள். பேரினவாத சிங்கள சக்திகளுடன் சேர்ந்துகொண்டார்கள்.

இவ்விதமே தமிழ்மக்களுக்கு எதிரான கொள்கை தென்னிலங்கையில் வலுப்பெற்றது. எனினும் விடுதலைப் புலிகளின் வீரம், தம் உயிரை தமிழ்மண்ணுக்காக அர்ப்பணிக்கும் தியாகம் இவற்றிற்கு முன்னால் சிங்களப் பேரினவாதம் நின்றுநிலைக்கமுடியாது தத்தளித்தது.

தமிழ்மக்களின் போராட்ட சக்தியின் உயர்வு கண்டு அச்சமுற்ற சிங்கள மக்கள் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படுவது அவசியம் என்பதைப் புரிந்துகொண்டனர்.

தமிழர் தொடர்பாக சிங்கள மக்களின் மனநிலையில் ஏற்பட்ட மாற்றமே சிங்கள அரசியல்வாதிகளை அவர்களது கொள்கையில் இருந்து விலக வைத்ததெனலாம்.

இருப்பினும் சமாதானத்தை விரும்புபவர்கள் போல தம்மைக் காட்டிக்கொள்வதில் சிங்கள அரசியல்வாதிகள் அக்கறையாக இருந்தனரேயன்றி, சமாதானத்திற்காக விசுவாசமாக உழைப்பதில் அவர்களுக்கு எந்தவித விருப்பமும் இருக்கவில்லை. அரசியல்வாதிகளின் நடிப்பை நிஜமென நம்பிய சிங்கள மக்கள் ஏமாந்துபோயினர்.

இப்போது இலங்கை அரசியலில் உள்வீட்டுக் குத்துவெட்டுக்கள் தாராளமாக நடைபெறுவது பேரினவாதத்தின் மற்றுமோர் உற்பத்தியாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஓரங்கட்டுவதில் அந்தக் கட்சிக்குள் இருக்கக்கூடிய முக்கிய புள்ளிகள் முனைப்புடன் செயலாற்றுகின்றனர்.

விடுதலைப் புலிகளுடன் சமாதான உடன்படிக்கையைச் செய்துகொண்ட ரணிலுக்கு அரசமைக்கும் சந்தர்ப்பம் மீண்டுமொரு தடவை கிடைத்துவிட்டால் அவர் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படுவார் என்ற நினைப்பில் அவருக்கெதிரான சக்திகள் ஒன்றிணைந்துள்ளன.

அந்த சக்திகளின் ஏவல்களின் விளைவே சிறையில் இருக்கும் எஸ்.பி.திஸநாயக்காவுக்கும் ரணிலுக்குமிடையிலான முரண்பாடாகும்.

எதுவாயினும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ரணிலின் பலம் குறைந்துவருவது வெளிப்படத் தொடங்கிவிட்டது.

# அரசாங்கம் ஒருபோதும் நாட்டிற்கு துரோகம் இழைக்க மாட்டாது

## ஜனாதிபதி உறுதிமொழி

(கொழும்பு)

**அரசாங்கம் நாட்டிற்கு ஒருபோதும் துரோகம் இழைக்க மாட்டாது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்துள்ளார்.**

**வடக்கு-கிழக்கு நெருக்கடிக்கு நிலையான தீர்வை ஏற்படுத்தும் முயற்சிகளில் நாட்டை தியாகம் செய்யப் போவதில்லை. எனவே பேச்சுவார்த்தைகளின் மூலமாகவே நிரந்தரத் தீர்வை எட்ட முடியும் எனவும் ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்தினார்.**



நேற்றுமுன்தினம் மொனறாகலை மாவட்டத்தின் செவனகலப் பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை ஆரம்பித்து வைத்த பின் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இக்கருத்துக்களைத் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னா எழுந்த சவால்களை எதிர்கொளவதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

எனவே புனர்வாழ்வு, புனர்நிர்மாண முயற்சிகளை முன்னெடுத்துச்செல்லும் நடைமுறையில் அரசாங்கத்திற்கு உதவ வேண்டும் என அக் கூட்டத்தில் ஜனாதிபதி எதிர்க்கட்சிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுனாமி புனர்நிமாணப்பணிகள் முறையான திட்டங்களின் கீழ் உயர்ந்த தராதரங்களுடன் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

ஆயிரம் குளங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் மொனறாகலை மாவட்டத்தில் உள்ள 56 நீர்த்தேக்கங்களை அரசாங்கம் புனரமைப்புச் செய்துள்ளது.

இந்தப் பிரதேசத்தில் வாழும் சமுர்த்திப் பயனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு பயனாளியும் தமது குடும்பத்தினரோடு சுயதொழில முயற்சிகளைத் தொடங்குவதற்கு வசதியாக ஒரு இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்படுகின்றது என்றும் ஜனாதிபதி தனது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் இதற்கான காசோலைகளை பகிர்ந்தளித்தமை குறிப்பிடத்தக்கது. (ரு-9)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளின் சேத விபரங்கள் திரட்டப்படுகின்றன

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வீடுகளின் விபரங்களை தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் குழுவொன்று திரட்டிவருகிறது.

வீடமைப்பு அதிகாரசபையின் பொறியியலாளர் உட்பட 7 பேர் கொண்ட குழு மருதங்கேணியில் தங்கிநின்று இவ் விபரங்களைத் திரட்டிவருகிறது. இப்பகுதியில் உடுத்துறை கிராம சேவை அலுவலர் பிரிவில் 500 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இககுழு இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒன்று மணற்காட்டுப் பகுதிக்கும் மற்றைய குழு ஆழியவளை முள்ளியாள் பகுதிக்கும் சென்று விபரங்களைத் திரட்டி வருகிறது. ஆறுபக்கங்களைக் கொண்ட படிவத்தில் இவ்விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. 40வீதத்திற்கு மேல் அழிவுற்ற வீடுகளை முற்றாக சேதமடைந்த வீடுகள் எனவும் 40வீதத்திற்குக் கீழ் சேதமடைந்த வீடுகளை பகுதி சேதமடைந்த வீடுகளாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்கு 2 1/2 இலட்சம் ரூபாவும் பகுதியாக சேதமடைந்த வீடுகளுக்கு ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு வீடுகளும் 500சதுர அடி நிலப்பரப்பைக் கொண்டதாகக் கட்டப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டரை இலட்சம் ரூபாவை சிறப்பான முறையில் பயன்படுத்துவோருக்கு வங்கியில் ஐந்து இலட்சம் ரூபா வரை கடன் பெறுவதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (7-35)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டுக்கு அபாயச் சங்கு ஊதுகிறார் விமல் வீரவன்ஸ

(கொழும்பு)

வடக்கு-கிழக்கிற்கு ஒன்றிணைந்த கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் பாராளுமன்றத்திற்கு இருக்கும் நிதி அதிகாரங்கள் கையளிக்கப்படுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அரசியலமைப்பின் படி பாராளுமன்றத்திற்கு இருக்கும் நிதியதிகாரத்தைக் கையளிப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மகரகமவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நாட்டுப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே விமல் வீரவன்ஸ இக்கருத்தினைத் தெரிவித்தார்.

இலங்கையில் செயற்படுகின்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் அரச நோக்கில் செயற்படுகின்றன. எனவே இவ்வாறான செயறபாடுகள் இலங்கையை மீண்டும் ஏகாதிபத்திய வாதத்திற்கே இட்டுச்செல்ல வழிவகுக்கும்.

இதனால் நாடு துண்டாடப்படும் நிலை ஏற்படும் என்றும் விமல வீரவன்ஸ அங்கு மேலும் தெரிவித்தார். (ரு-9)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு, அபிவிருத்தியை நெறிப்படுத்த தேசியக் கொள்கை உருவாக்கப்படும்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள சிறுவர்களின் அபிவிருத்தியையும், பாதுகாப்பையும் நெறிப்படுத்துவதற்காக தேசியக் கொள்கையொன்றை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் செயற்பட்டுவரும் அரசசார்பற்ற அமைப்புகளோடு பேச்சுவாத்தை நடத்தி இந்தத் திட்டத்தை முன்னெடுக்கவிருப்பதாக மகளிர் மேம்பாட்டு சமூக நலன்புரி அமைச்சு தெரிவிக்கின்றது.

இவ்வாறான அமைப்புக்கள் மூலம் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற சிறார்களின் முன்னேற்றத்துக்கான வேலைத் திட்டங்கள் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு அவற்றை தேசியக் கொள்கையின் படி செயற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

இதற்கென காலி, மாத்தறை,அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் பாராளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களோடு பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் சமூக நலன்புரி அமைச்சு தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டம் குறித்து அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் அடுத்தமாத முற்பகுதியில் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (7-9)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

உண்மையான முயற்சியே நமக்குத் தேவை. அது நம்மிடமிருந்தால் நமக்குத் தேவையான உதவிகள் வந்தே தீரும். இதுவே ஆன்மீக வாழ்க்கையைப் பற்றிய உண்மை. ஒருவேளை நாம் பெற விரும்பும் ஆத்மஞானம் நமக்கு மிகவும் அருகிலேயும் இருக்லாம். அந்த நல்ல நேரம் எப்போது வரும் என்று யாருக்குத் தெரியும்?

சுவாமி விவேகானந்தர்

# யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகள் சிலவற்றின் முன்னணி பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

**க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகள் நேற்று யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு கிடைக்கப்பெற்றன. அதன் அடிப்படையில் முன்னணிப் பெறுபேறுகள் வருமாறு.**

**யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி**

பூர்ணிமா கதிரவேலு(10-ஏ), தர்சிகா அருணாசலம்(10-ஏ), கிருத்திகா கோபால சுதந்திரன்(10-ஏ), சிவமங்கை சண்முகலிங் கம்(10-ஏ), சசிகலா சுப்பிரமணியம்(10-ஏ),

கஜனி நித்தியானந்தராஜா(9-ஏ,சி), இவாஞ்சலின் மிருணாளினி ஜெயராஜா (9-ஏ,சி), கஜித்தா இராசேந்திரம் (9-ஏ,பி), கோபிகா குணராஜா(9-ஏ,பி),யசோதா இராசையா(9-ஏ,பி),மாதுரி ஸ்ரீபாலன்(9-ஏ,பி), துஸ்யந்தி யாதவகுலசிங்கம்(9-ஏ,சி), சாலினி நடேச லிங்கம்(9-ஏ,சி), சங்கீதா திருச்செல்வராஜா (9-ஏ,சி), சிந்துரேகா லோகேஸ்வரன் (9-ஏ,சி), காயத்திரி அரியரட்ணம்(9-ஏ,சி),

தர்மிகா திஸ்ஸநாயகம்பிள்ளை (8ஏ.2சி), அபிராமி சந்திரகாந்தன் (8-ஏ,பி,சி),கௌசினி இராசையா (8-ஏ,பி,சி), நிரோஷிகா யோக நாதன் (8-ஏ,2பி), கல்யாணி தியாகராசா (8-ஏ,2-சி), காயத்திரி யோகதாஸ் (8-ஏ,2பி), மஞ்சுளா துரைராஜா(8-ஏ,2பி), தட்சாயினி விஜயநாதன்(8-ஏ,பி,சி), வனஜா கிருஷ்ணதாசன்(8-ஏ,பி,சி),

மைதிலி சிவசுப்பிரமணியம்(7-ஏ,2பி,சி),துஷ்யந்தி அம்பிகைபாலன்(7-ஏ,2பி,சி), பிருந்தா இராஜரடனம்(7-ஏ,2பி,சி), ஜெனனி சர்வானந்தன்(7-ஏ,2பி,சி), லிங்காஜினி சண் முகலிங்கம்(7-ஏ,3பி),விஜித்தா முத்துலிங் கம்(7-ஏ,பி,சி,எஸ்), செந்தூரி ஜெயராஜா(7-ஏ,2 பி), சத்தியகலா கோடீஸ்வரநாதன்(7-ஏ,3பி,), சிவரூபினி தணிகாசலம்(7-ஏ,பி,2சி),ஆரணி சிவபாலசுந்தரம் (7-ஏ,2பி,சி),

லக்சிதா கனகேஸ்வரன்(7-ஏ,3 பி), மயூரதி துரைராசசிங்கம்(7-ஏ,3பி), கௌந்தீகா பாலசூரியன்(7-ஏ,3பி),மேகலா ஜெகதீசன்(7-ஏ,2பி,சி), வேகலா ஜெயதரன்(7-ஏ,3பி), அபிராமி துரைராசா(7-ஏ,பி,2சி), ஜபிந்தா மகேந்திரராசா (7-ஏ,2பி,சி), கஜித்தா வசீகரன்(7-ஏ,3பி),

காமலிட்டா மரியநாயகம்(6-ஏ,3பி,சி), பவித்திரா சகாதேவன்(6-ஏ,3பி,சி),கஜித்தா சச்சிதானந்தம்(6-ஏ,4பி), மீரா குமாரசுவாமி(6-ஏ,3பி, சி), சிவதேவி தங்கவேல்(6-ஏ,3பி,எஸ்),கம்சினி கேதீஸ்வரசர்மா (6-ஏ,பி,2சி,எஸ்), லாவண்யா மகேந்திரராசா(6-ஏ,4சி), சிந்துஜா சத்தியபாலன்(6-ஏ,3பி,எஸ்), சுபாங்கி செந்தில் குமரன்(6-ஏ,2பி,சி,எஸ்), தனுஷா தர்மலிங்கம்(6-ஏ,பி,2சி, எஸ்),

அபிராமி மகேந்திரன்(6-ஏ,3பி,சி), லபித்தா பத்மநாதன்(6-ஏ,4பி), மலர்மதி ஜெயரட்ணம் (6-ஏ,2பி,2சி), புவிவிஸ்வலிங்கம்(6-ஏ,3பி,சி), சஜித்தா வேதாரணியம்(6-ஏ,2பி,2சி), சாளினி புஸ்பநாதன்(6-ஏ,2பி,சி,எஸ்), கஸ்தூரி சிவராஜ சுந்தரம்(6-ஏ,4பி), மேனகா ஜெகதீசன்(6-ஏ,பி,3சி), துளசி தர்மகுலசிங்கம்(6-ஏ,2பி,2சி), வேம்பா ஜெயதரன்(6-ஏ,3பி,சி).

**யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி**

சிவபாஸ்கரி பசுபதி(9ஏ,பி), பாமினிபரஞ் சோதி(9ஏ,பி), றெனிசியா செல்வரத்தினம் (9ஏ,எஸ்), கௌசிகா தவராசா(8ஏ,2பி), கீர்த்தனா தங்கராஜா(8ஏ,பி,சி), தர்சிகா பூபாலசிங்கம்(8ஏ,பி,சி), நிஸ்மதா குணரத்தினம் (7ஏ,3பி), சிவரூபி சிவநாதன் (7ஏ,2பி,சி), ரோகினி பூபாலசிங்கம்(7ஏ,2பி,சி), பைந்தவி ஜெயராமன்(7ஏ,பி,2சி), தர்ஜனா சுந்தரலிங்கம்(7ஏ,2பி,எஸ்),

கிருபாலினி கேதீஸ்வரநாதன் (6-ஏ,3பி,எஸ்), ஜீவிதா கணேசன்(6-ஏ,3பி,எஸ்),சரண்ஜா யோசப்குமார் (6-ஏ,3பி,சி), ஜீவோஜனா மகேந்திரன்(6-ஏ,2பி,எஸ்), வைதேகி செல்வநாதன்(6-ஏ,2பி,2சி), தர்சிகா விமலேந்திரன் (6-ஏ,பி,2சி,எஸ்), தியாகினி சிவபாதசுந்தரம் (6-ஏ,பி,2சி, எஸ்), கனித்தா கனகரத்தினம் (5-ஏ,4பி,சி), தர்சினி ரவீந்திரன்(5-ஏ,4பி,சி),

சுலக்சி மணிவண்ணன் (5-ஏ,2பி,3சி), பர்மியா கருணானந்தசோதி(5-ஏ,2பி,3சி), துஷாநிதி சிவஞானபானு(5-ஏ,2பி,3சி), தர்சிகா ராஜரட்ணம்(5-ஏ,2பி,3சி), மேரி அனுசியா அன்ரன்(5-ஏ,2பி,3சி), தாரணிதனிநாயகம்(5-ஏ,2பி, 2சி, எஸ்), திவ்வியா ரவீந்திரன்(5-ஏ,2பி, 2சி,எஸ்), சாமிலா உமாமகேசன்(5-ஏ,3பி,2சி).

**கொக்குவில் இந்துக்கல்லூரி**

வதனி சிவகுமார் (9ஏ,பி), வலஜிசிவ ஞானராஜா(8ஏ,2பி), நடராஜமணி சிவாஸ்கர் (8ஏ,சி,எஸ்), முருகவேள் மயூரன்(7ஏ,2பி,சி),

யோகராசா டினேஸ்சாந்(6-ஏ,பி, சி), சிறீஸ் கந்தராஜா பார்த்தீபன்(6-ஏ,3பி,எஸ்), வரதராஜா தனுஜன்(6-ஏ,2பி,2சி), ஜனனி பரமநாதன்(6-ஏ,4சி), ரம்யாஸ்ரீகாந்தன்(6-ஏ,3பி,சி), சர்வானந்தி ஞானானந்தா(6-ஏ,பி,3சி), சித்திவிநாயக மூர்த்தி நிருஜன்(5-ஏ,3பி,2சி), ஸ்ரீசயந்தராஜ ஸ்ரீசாந்த் (5-ஏ,2பி,2சி), சிவமூர்த்தி மஞ்சுதன் (5-ஏ,3பி,சி), ஜயபாலினி இராச

**யாழ்.மத்திய கல்லூரி**

சண்முகராஜா தவக்குமரன்(10-ஏ), கணேசலிங்கம் விஜயராஜ் (9-ஏ,பி), பேரின்பநாதன் ரவிக்குமார்(7-ஏ,பி,2எஸ்), சண்முகம் சொலமன் (7-ஏ,2பி,எஸ்),

பரமலிங்கம் தர்சானந்(6-ஏ,2பி, 2சி), இராசரத்தினம் எபிரகாம்பிரசாத்(6-ஏ,4பி), வை.எல்.சுரேந்தர் (6-ஏ,3சி), ஜீவநாதன் பானுஜன்(5-ஏ,4பி,சி),முருகையா மோகன்ராஜ்(5-ஏ,2பி,2சி,எஸ்), சிவராஜா நியூரன்(5-ஏ,பி,2சி,எஸ்),

பாலசிங்கம் சாருபன்(5-ஏ,3பி,சி, எஸ்),சண் முகநாதன் கமல்ற்றன்(5-ஏ,2பி,சி,2எஸ்),சுந்தரலிங்கம் மயூரன்(5-ஏ,2பி,2சி), பரந்தாமன் சதீஸ்குமார்(5-ஏ,2பி,2சி,எஸ்), ஜெயரட்ணம் வசந்தகுமார்(5-ஏ,2பி, 2சி).ரத்தினம்(5-ஏ,2பி,2சி), கஜிதாசெல் லக்கதிர்காமு(5-ஏ,3பி,2சி),

மித்திரா பாலசிங்கம்(5-ஏ,பி,4சி), ரேணுகா சிவசுந்தரம்(5-ஏ,பி,4சி), சயனிகணேசன்(5-ஏ,2பி,2சி), வதனா உதயகுமார்(5-ஏ,பி,3சி), யாளினி நித்தியானந்தன் (5-ஏ,3பி,2சி).

## சேவை நயப்பு

யாழ்ப்பாணம் சைவபரிபால்ன சபையின் பரீட்சைச் செயலாளராகவும், தலைவராகவும் பணியாற்றிய சைவப் புலவர் வல்லிபுரம் கந்தசாமியின் சேவைநயப்பு வைபவம் இன்று யாழ். மாநகர சபை ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (த)

## விவாதப்போட்டி

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான விவாதப்போட்டி இன்று காலை 8.30மணிக்கு யாழ். மத்தியகல்லூரியில் நடைபெறும் என யாழ்.மாணவர் அமைப்பு பொறுப்பாளர் கிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (ந.74)

## புலிகளுடன் இணங்கி...

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குவதற்காக உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்புத் தொடர்பான இறுதிவரைபு எதனையும் இதுவரை அரசு தயாரிக்கவில்லை எனினும் விடுதலைப்புலிகளின் முடிவினை எதிர்பார்த்திருப்பதே இதற்குக் காரணமாகும்.பொதுக் கூட்டமைப்பு உருவாகாத நிலையில் சுனாமி நிவாரணங்கள் சகல பிரதேச மக்களுக்கும் சம அளவில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற நிலைமையிலேயே அரசாங்கம் இருக்கிறது.

சுனாமி அனர்த்தத்தால் பாரிய அழிவுகள் ஏற்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொளவது என்ற பிரச்சினை தற்போது அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

நாட்டின் சில பிரதேசங்களில் நாளாந்த நடவடிக்கைகளில் அரசாங்கம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ தலையிடாமை தற்போது நடைமுறையில் உள்ள பிரச்சினையாகும்.

எவ்வாறாயினும் எம்மால் எப் பிரச்சினைய்யத்தீர்க்க வேண்டுமாயினும் விடுதலைப்புலிகளையே அணுகவேண்டியுள்ளது.

ஒதுங்கிச் செயற்பட எம்மால் மூடியாதுள்ளது இதற்கு எம்முடன் கூட்டுச்சேர்ந்திருக்கும் ஜே.வி.பி.ஆதரவு தந்தாலும் நாட்டு மக்களும் சர்வதேச சமூகமும் ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். (த-4)

## உலகவங்கி...

பாதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவழங்குவ்தாக அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தபோதிலும்அந்தநிதியும் உரியமுறையில் வழங்கப்படவில்லை. ஆனால் அரசாங்கம் தனியார் துறையினரையும் வீடமைப்புத் தொடர்பான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு கோரியுள்ளது.

அதற்கு முன்பாக உலகவங்கி வழங்கிய 400 மில்லியன் அமெரிக்க டொலருக்கு என்ன நடந்தது. அதுயாருடைய தேவைக்காக பயன்படுத்தப்பட்டது என்பதனைஅரசாங்கம் வெளியிட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (த-08)

# புனரமைப்பு வேலைகளை முன்னெடுக்க 22 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

## செய்தியாளர் மாநாட்டில் விபரிப்பு

இலங்கையில் சுனாமியால் பலியானவர்களின் எண்ணிக்கை 38 ஆயிரம் பேர்என அறிவிக்கப்பட்டுள்ளது.சுனாமி ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் மற்றும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள புனர்நிர்மாணத்திட்டங்கள் தொடர்பான செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பு சௌஸ்திரிபாயவில் நடைபெற்றது.

இதன்போதே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. சுனாமியால் ஏற்பட்ட சேதங்களைப் புனரமைப்பதற்கு 1.8 பில்லியன் அமெரிக்க டொலர் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது அத்துடன் பாதிக்கப்பட்டுள்ள ஒரு இலட்சத்து 14 ஆயிரம் வீடுகளில் 90 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு நன்கொடையாளர்கள் உதவிகளைத் தருகின்றனர்.

மாநாட்டில் இவ்வுதவிகளை வழங்க ஹெரிற்றா, சர்வதேச் செஞ்சிலுவைச் சங்கம், வேல்ட்விசன், ஹெயர் அமைப்பு என்பன முன்வந்துள்ளன.

கல்வித்துறையில் ஏற்பட்ட சேதங்களை புனரமைப்பதற்கென 16 ஆயிரத்து 910 மில்லியன் ரூபாக்களும் சுகாதாரத் துறைக்கு 10ஆயிரம் மில்லியன் அமெரிக்கடொலரும் தேவைஎன மதிப்பிடப்பட்டுள்ளது.

முற்றாக அழிவடைந்த 182 பாடசாலைகளில் 175 பாடசாலைகளைக் கட்டுவதற்கு நிதியுதவி கிடைத்திருக்கிறது சுகாதாரத்துறையில் 72 வைத்திய சாலைகள் சேதமடைந்துள்ளன. இவற்றை புனரமைக்க10ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகிறது. இதற்காக 22 ஒப்பந்தங்களை அரசு செய்துள்ளதாக நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனரமைப்புத் தகவல்கள் தொடர்பாக நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர்களான லக்ஷ்மன் கதிர்காமர், சரத் அமுனுகம ஆகியோரும் பவ்ரல் அமைப்பின் தலைவர் மனோதித் தவேல நிவாரணப்படையணிகளுக்கான ஆணையாளர் ரணவிராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.(ச,4)

## இராணுவம்....

ஆகியோரைச்சந்தித்துக் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இச்சந்திப்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள்.

குறிப்பாக இச்சந்திப்புக்களில் தொடர்ந்த வண்ணமுள்ள ஆட்கொலைகளை நிறுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் இடைநிறுத்தப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுக்கும் படையதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்புக்களை மீண்டும் தொடங்குதல் போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

படையதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில் ஆட்கொலைகளுக்கான பின்னணி, அதனைத் தடுக்க தாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்பன பற்றி எடுத்துக் கூறியதுடன் விடுதலைப் புலிகளுடனான சந்திப்புக்கு மீண்டும் ஏற்பாடு செய்யப்பட்டால் அதற்குத் தாம்தயார் என்றும் படையதிகாரிகள் தெரிவித்தார்கள்.

விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது யுத்தநிறுத்த உடன்படிக்கையின் போது இராணுவக் கட்டுபாட்டுப் பகுதிகளிலுள்ள ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் முற்றாகக் களைவதன் மூலமே இப்படியான ஆட்கொலைகளைத் தடுக்கமுடியும் என்றும், படையதிகாரிகளுடனான சந்திப்பற்றி கோரிக்கை முன்வைக்கப்பட்டால் சுமுகநிலை ஏற்படும் போது பேசுவதற்கும் தாம் தயார். என்றும் விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹொக்லண்ட் இச்சந்திப்புத் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

சந்திப்புக்கள் யாவும் திருப்திகரமாக நடைபெற்றன. அண்மைக் காலமாக தொடரும் ஆட்கொலைகள் பெரும் பிரச்சினையாக உள்ளன. இது சகல நடவடிக்கைகளுக்கும் ஒரு அச்சுறுத்தலாக்வுள்ளது. இவை உடனடியாக நிறுத்தப்படவேண்டும். தற்போது நல்ல சூழ்நிலை இல்லை என்பது எமக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் தெரியும்.

இந் நிலையில் தொடரும் ஆட்கொலைகளை நிறுத்த சகல தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டும் என்று அவர்தெரிவித்தார். (த-04)

## இன்று...

யாளர்களால் அடக்கி ஒடுக்கப்பட்ட போது தமிழ் மக்களின் விடிவுக்காக நீடித்த அமைதி, சமாதானத்துக்காக குரல் கொடுத்த ஓர் உன்னத தலைவர். அவருடைய இழப்பு தமிழ்த் தேசியத்திற்கு பேரிழப்பாகும். ஆகையால் தமிழ் தேசிய மக்கள் அனைவரும், நித்திய இளைப்பாற்றியடைந்த கத்தோலிக்க திருச்சபையின் பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் இறுதி ஆராதனை இன்று வத்திக்கான் புனித இராயப்பர் சதுக்கத்தில் நடைபெறுகிறது. எனவே எமது இதய அஞ்சலியை தெரிவிக்கும் வகையில் இன்றைய தினத்தில் யாழ். மாவட்டப் பகுதிகளில் இயல்பு நிலை பாதிக்காத வகையில் அனைத்து மக்களையும் பொது நிறுவனங்களையும் கறுப்பு வெள்ளை கொடிகளை கட்டியும் சோக கீதம் இசைத்தும் துக்க தினத்தை அனுசரிக்கும்படி யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டி நிற்கிறது. (த-04)

இணையற்ற சேவையினூடு...
32 வருடங்கள் தனித்துவம் பெற்ற நிறுவனத்தில்
THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS
O/L Day Class
பகல் நேர வகுப்புகள்
காலை 8.30 - பி.ப.1.15
ஏப்ரல் 15ல் ஆரம்பம்
மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது
அனுமதிக்கு முந்துங்கள்
The Express Institute
Irupalai, Kopay. -அதிபர்.

குளிரூட்டப்பட்ட
நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம்
தாவடி மைந்தன் ஜெய் ஆகாஷ், பிரணதி, நாசர், தாமு, வையாபுரி நடித்த




கா.நேரம்: 10.30, 02.30, 06.30, 09.30 (பு.நே)
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

நிறைஞ்சனாஸ்
சங்கானை
விஜய், ரவிகிருஷ்ணா, நதீஷா நடித்த



கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)
மனோகரா
யாழ்ப்பாணம்
பார்த்திபன், காவேரி, மாஸ்ரர் அஸ்வின் நடித்த
கண்ணாடிப் பூக்கள்
காநேரம்: 10.30, 2.30,
06.04.2005 முதல், இரவு 6.30,9.30 இற்கு / தனுஷ், ஸ்ரீதேவி நடித்த
தேவதையை கண்டேன்

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.